பக்கங்கள்-16 15.தை.2023 விலை–50.00




# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –398



## தமிழரசு கட்சியில் உள்ளவர்கள் வந்தேறிகள் இவர்களே தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைத்தார்கள்

சிறப்பு நேர்காணல்



## ஜனாதிபதி ரணிலின் சூழ்ச்சி வலையில் சிக்கித்தவிக்கும் கட்சிகள்



## தமிழரசு கட்சியின் பிளவு! பலம் பெரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி



## அரசதரப்பினால் பந்தாடப்படும் முஸ்லிம் கட்சிகள்

# தமிழரசு கட்சியில் உள்ளவர்கள் வந்தேறிகள்

# இவர்களே தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைத்தார்கள்

**முன்னாள் வடமாகாணசபை விவசாய அமைச்சர் க. சிவநேசன் (பவான்) அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**



**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையிலே உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக தற்பொழுது பரபரப்பாக சிங்கள பரப்பிலே கட்சிகள் தமக்கான வேலைத் திட்டங்களை செய்துகொண்டிருக்க தமிழ் தேசிய கூட்டமைப்பாக இயங்கி வந்த தமிழரசுக்கட்சி தற்பொழுது தன்னிச்சையான முடிவெடுத்தாக பலராலும் பார்க்கப்படுகின்றது. தற்பொழுது ஒரு அறிவித்தலை கொடுத்திருக்கின்றார்கள் தற்பொழுதிருந்த ரெலோவையும் புளொட்டையும் தனித்து போட்டியிட்டு மீண்டும் இணையுமாறு ஒரு கருத்தை தெரிவித்திருக்கின்ற நிலையிலே அப்படியெனில் தமிழரசுக் கட்சி என்று நீங்கள் யாரை குறிப்பிடுவீர்கள்? அதாவது வந்தேறிகள் இருக்கின்றார்கள் என்றால் யார் அந்த வந்தேறிகள் இவர்களது கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டு தான் மாவை சேனாதிராஜா ஆளுமையற்ற முடிவுகளை எடுப்பதாக உங்களது கருத்துக்கள் இருக்கின்றதே யார் அவர்கள்?**

பதில் : தமிழரசுக் கட்சியை பொருத்தவரையிலே ஆரம்பக்காலங்களில் இருந்து தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியில் செயற்பட்டு வருபவர்கள் என்று கூறுகின்ற பொழுது பல கேள்விகள் இருக்கின்றன. இன்று தமிழரசுக்கட்சியில் ஆளுமையிருப்பவர்கள் யார் என்ற ஒரு கேள்விக்குறி இருக்கின்றது. அவர்கள் தொடர்ந்தும் தமிழரசுக்கட்சியில் பயணிப்பவர்களா அல்லது புளொட்டிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களா என்பதும் உதாரணமாக மன்னாரை பொறுத்தவரையிலே இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர் புளொட்டிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சிக்கு சென்றவர். அதற்கு முன்னர் அவருக்கும் தமிழரசுக் கட்சிக்கும் எந்தவித தொடர்பும் இருந்தது இல்லை.

அதைப்போன்று ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இருந்து செயற்பட்டுக்கொண்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் அவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இருந்து வெளியேறி அவர் தொடர்ந்து தமிழரசுக் கட்சியில் இருந்து இன்று மத்தியக்குழுவில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். முல்லைத்தீவை பொறுத்தவரையில் ரவிகரன் அவர்கள் மாகாணசபையிலே ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியினுள்ளே வந்து அதிலிருந்து வெளியேறி அல்லது வெளியேற்றப்பட்டு ஏதோவொரு காரணத்தினால் அவர் இன்று தமிழரசுக் கட்சியில் மாவட்டத்தினுடைய செயற்பாட்டாளராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். கிளிநொச்சியை பொறுத்தவரையிலே சிறிதரன் அவர்கள் ஆரம்பத்திலே ஈ.பி.ஆர்.எல்.எப் ஊடாகத்தான் அரசியலின் உள்ளே புகுந்தவர். இன்று தாங்கள் தமிழரசுக் கட்சியின் தலைமை போக்கு தனக்கு வேணும் என்று கேட்குமளவிற்கு வளர்ந்திருக்கின்றார்.

சிறிதரன் அவர்களும் வேறு கட்சியிலிருந்து வந்தவர் சாந்தி சிறிஸ்கந்தராசாவை பொறுத்தவரை அவருடைய குடும்பம் அவருடைய கணவர் அனைவருமே ஆரம்ப காலத்தில் புளொட்டினுடைய செயற்பாட்டாளராக இருந்திருக்கின்றார்கள். அதன் பின்னர் தமிழரசுக் கட்சிக்கு போனதன் பின்பு தமிழரசுக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளராக இருக்கின்றார்கள். அது மட்டுமல்ல சாணக்கியனை பொறுத்தவரையிலே ஆரம்பத்தில் அவரது தந்தையாரின் காலத்திலே இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அண்மைக்காலத்திலே சாணக்கியன் மிக இளைஞராக வந்து தேர்தலிலே முதன்முதலில் நின்ற கட்சி என்றால் அது மகிந்த ராஜபக்சவினுடைய வெற்றிலை சின்னத்தை கொண்ட சிறிலங்கா சுதந்திர கட்சியிலே போட்டியிட்டு தேசியத்திற்கு எதிராக அந்த வாக்கை சிதறடித்ததன் பின்பு இன்று மீண்டும் அவர் தமிழரசுக் கட்சியினூடாக வந்ததனால் அவரும் இன்று தமிழரசுசக் கட்சியினுடைய முக்கியமான செயற்பாட்டாளராக இருக்கின்றார். அதைத்தவிர உங்களுக்கு தெரியும் போராட்டங்கள் எல்லாவற்றையும் தாண்டி யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்பு கொழும்பிலே செயற்பட்டுக்கொண்டிருந்த யு.என்.பி யினுடைய ஆளுகைக்கு கீழ் செயற்பட்டுக்கொண்டிருந்த சுமந்திரன் இன்று தமிழரசுக் கட்சியின் ஒரு மிகமுக்கியமான பேச்சாளர் மட்டுமல்ல அடுத்தகட்ட தலைவர் தான் தான் என்று கூறுமளவிற்கு வளர்ந்திருக்கின்றார். இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது இவர்கள் தான் இன்று இருக்கின்ற முக்கிய செயற்பாட்டாளர்களாக இருக்கின்றவர்கள். அப்படியிருக்கும் பொழுது இவர்களை நீங்கள் எப்படி தமிழரசுக்கட்சியில் வழிவந்தவர்கள் என்று கூறமுடியும். **இன்று தமிழரசுக் கட்சி என்பது நிச்சயமாக வந்தேறிகளினால் வந்து ஆளுமைப்படுத்தப்பட்ட கட்சியாகும்.** இதில் மிக வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் மிக நீண்டகாலமாக செயற்பட்டுவந்த மாவை சேனாதிராஜா மற்றும் புறொக்டர் தவராசா போன்றோர் வேதனைப்பட்டு கூறுகின்றார்கள். தாங்கள் இந்த கூட்டை உடைக்கக்கூடாது என்பதற்காக எல்லோரிடமும் மன்டியிட்டு இறங்கி கேட்டோம் அப்படி செய்து விடாதீர்கள் என்று கேட்டும்கூட தங்களது கருத்து இதில் எடுபடவில்லை என்று சொன்னார்கள்.

**கேள்வி : அவர்கள் எதற்காக அப்படி கேட்டார்கள்? ஆயுத கட்சிகளுடன் இணைந்து பயணிக்க முடியவில்லையா அல்லது அவர்கள் வன்முறையாளர்கள் கருத்தை பரப்பி அல்லது வாக்குகளை சேகரிக்க முடியாத ஒரு சூழல் என்பதற்காகவா அல்லது என்ன காரணம்?**

பதில் : ஒவ்வொருவரினதும் பின்னணிகளையும் நாம் எடுத்துப்பார்க்க வேண்டும். இவர்களது பின்னணிகள் என்ன என்பது எமக்கு சந்தேகத்திற்குரிய விடயம். இவர்கள் யாரினுடைய அஜந்தாவிற்கு கீழே இவர்கள் வேலை செய்கின்றார் என்பதை நாம் ஆராய வேண்டிய விடயம். எனவே அதன் பின்பு தான் நாங்கள் சரியான முடிவை எடுக்க முடியும். இவர்கள் தமிழரசுக் கட்சி தானா அல்லது தமிழரசுக் கட்டியினுடைய கருத்தியல் தான் இந்த பிரிந்து சென்று செயற்படும் முடிவா என்பதை எல்லாம் அதன் பின்பு தான் நாங்கள் ஆராய முடியும். எனவே நாங்கள் தொடர்ந்து இப்படியான ஊடுறுவிகளால் மேற்கொள்ளப்படுகின்ற விடயங்களை விடுத்து நாங்கள் தமிழ் தேசிய தரப்பிலே இருக்கின்றவர் ஒன்றிணைந்து தமிழ் மக்கள் மத்தியிலே சரியான கட்டமைப்பை உருவாக்க வேண்டும். ஒற்றுமை என்பது தேர்தலுக்கான கட்டமைப்பு இல்லை. இவர்கள் சொல்வது போன்று எந்தவிதமான எந்த டெக்னிகல் ரீசனும் கிடையாது. தமிழ் மக்கள் ஓரணியில் திரள்வதற்கு டெக்னிக்கல் ரீசன் என்ன இருக்க முடியும்.

**கேள்வி : விகிதாசார அடிப்படையிலான விடயத்தை தான் தேர்தல் உத்தி (technic ) என்கின்றார்கள்.**

பதில் : அது நீங்கள் தேர்தல் பற்றி கதைக்கின்றீர்கள் ஆனால் எந்த கட்சி இருக்கட்டும் ஆனால் எந்த கட்சியாவது எங்களது தனி நோக்கம் தேர்தல் தான் என்று வெளிக்கிட்டிருக்கின்றதா? இல்லை. நாங்கள் தங்களது யாப்பிலே எங்களது நோக்கம் தேர்தல் தான் என்று சொல்லியிருக்கின்றது. அப்படி தமிழ் தேசிய தரப்பில் உள்ள கட்சி ஏதாவது நீங்கள் கூறுங்கள். தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை இன்று எல்லாவற்றையும் தான்டி தாயகமும் இல்லை தேசியமும் இல்லை சுயநிர்ணய உரிமையும் இல்லை சமஷ்டி இல்லை தற்பொழுது நாங்கள் கேட்டுக்கொண்டிருப்பது 13 வது திருத்த சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுங்கள் என்னும் அளவிற்கு இன்று தமிழ் தேசியம் பிளவுபட்டிருக்கின்றது. அதற்கு மேல் கேட்கமுடியாது இருப்பதற்கு காரணம் இந்த பிளவு தான் இந்த பிரிவினை தான்.

ஆகவே இந்த பிரிவினையை நாங்கள் தவிர்த்து தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் திரள்வதன் மூலம் தான் நாங்கள் தமிழ் மக்களுக்கான உண்மையான குறைந்தபட்ச அதிகாரங்களையேனும் பெற்றுக்கொள்ள முடியுமே தவிர இந்த டெக்னிக்கல் ரீசனால் அங்கு ஒன்றும் வரப்போவதில்லை. தந்தை செல்வா காலத்தில் எல்லா மக்களும் சேர்ந்து போட்டியிட்ட போது அமிர்தலிங்கம் காலத்தில் எதிர்கட்சி தலைவராக வரக்கூடிய சூழல் இருந்தது. அதன் பின்னர் விடுதலைப்புலிகளின் பின்னணியில் சேர்கின்றபொழுது 68 வீதமான வாக்குக்கள் எடுக்கக்கூடியதாக இருந்தது.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளால் 68 வீதமான மக்களை திரட்டி ஒற்றுமையை ஏற்படுத்திக்கொடுத்து விட்டுத்தான் அவர்கள் போனார்கள். ஏறக்குறைய பெரும்பான்மையான தமிழ் மக்களை ஓரணியில் திரட்டி இவர்களின் கையில் கொடுத்துவிட்டு போனார்கள். இன்று கடந்த தேர்தலில் 32 வீதமாக அதை ஆக்கிவிட்டு டெக்னிக்கல் ரீசன் என்று கூறினால் என்ன டெக்னிக்கல் ரீசன் அதில் இருக்கின்றது. அதை சரியான முறையிலே நீங்கள் கூறுங்கள்.

**கேள்வி : இதில் தேர்தல் உத்தி (technic) என்று நீங்கள் கூறுவது போன்று ஒன்றுமில்லை. ஆனால் இவர்கள் அதிலே ஒரு வடிவத்தை கொடுக்கின்றார்கள் தொடர்ந்தும் நாங்கள் ஆயுத கட்சிகளை உள்வாங்கிக்கொண்டு இவ்வாறானதொரு பயணிப்பை பயணிப்போமாக இருந்தால் இதைவிடவும் மிகமோசமான தேர்தல் தோல்விகளை நாங்கள் சந்திக்க நேரிடும் என்பது அவர்களின் கருத்து. காரணம் என்னவென்றால் இவர்கள் ஒரு வன்முறை கலந்த கட்சிகளாக இருக்கின்றார்கள் என்பது இதைத்தான் அவர்கள் அடிக்கடி மக்கள் முன்னிலையில்கூட கூறுகின்றார்கள்.**

பதில் : இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுதலைப்புலிகளால் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் தேர்தல் மட்டுமில்லை என்பதனை நீங்கள் கூறுகின்றீர்கள் அப்படியிருக்கும் பொழுது ஏன் தேர்தல் டெக்னிக்கல் ரீசனை இதற்குள் கொண்டுவந்து செருகுகின்றீர்கள். இதில் ஒரு கட்சியினுடைய கொள்கையும் இல்லையே. போராட்டம் மௌனிக்கப்பட்டது ஒற்றுமையாக ஒன்றிணைந்து தமிழ் தேசிய பரம்பிலே இருக்கின்ற அனைத்து மக்களையும் அணி திரட்டி அந்த மக்களுடன் இணைந்து தமிழ் மக்களுக்கான ஒரு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுப்பதை நோக்கமாகத்தானே எல்லா கட்சியும் தங்களது யாப்பை வடிவமைத்திருக்கின்றது. அப்படி வடிவமைத்த நீங்கள் ஏன் தேர்தலுக்காக பிரிகின்றீர்கள். தமிழரசுக் கட்சியின் யாப்பில் என்ன சொல்லியிருக்கின்றது சமஷ்டி முறையிலான பிரிக்கப்படாத வடக்கு கிழக்கு இணைந்த தாயக கோட்பாட்டை அவர்கள் சொல்லுகின்றார்கள். எனவே இந்த தாயக கோட்பாட்டிற்கு தேர்தல் தானா முக்கியம். இல்லையே அதற்கும் இதற்கும் சம்மந்தமில்லை. கட்சியின் யாப்பை இப்படி வைத்துக்கொண்டு ஏன் அதனை உடைக்கும் நோக்கில் தமிழ் தேசியத்தை பலவீனமாக்கும் விதமான செயற்பாட்டை நீங்கள் செய்கின்றீர்கள்? என்னத்திற்காக இந்த பின்னடைவு. தமிழரசுக் கட்சிக்கான பாராளுமன்ற உறுப்பினர்களினது பின்னடைவை சொல்லுகின்றீர்கள் அப்படித்தானே. எனவே இதில் என்ன கொள்கை அடிப்படையிலான ரீசன் இருக்கின்றது.

**கேள்வி : உள்வாங்கப்பட்ட ஏனைய கட்சிகளில் தங்களை முந்திக்கொண்டு செல்வதான ஒரு நிலைப்பாடு இருக்கின்ற பொழுது தான் அவர்கள் அவ்வாறான ஒரு கிட்டத்தை முன்னெடுக்கின்றார்கள் என்பது வெளிப்படையாக தெரிகின்றது. இவர்களின் கொள்கை எல்லாமே தேர்தல் தான் இந்த சூழலில் ஆயுத கட்சிகள் ஒரு முடிவை எடுத்தார்கள் அதாவது ரெலோ புளொட் ஈ.பி. ஆர்.எல்.எப் இந்த மூன்று கட்சிகளும்**

பதில் : ரெலோ புளொட் ஈ.பி.ஆர்.எல். எப் கட்சிகள் மட்டும் ஆயுத குழுக்கள் இல்லை இன்னும் பல ஆயுத குழுக்கள் இருந்தது தான். அனைவரும் ஆயுதத்துடன் போராடியவர்கள் தான். எனவே ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு அரசியல் நிலைமைக்கு வந்தாலும் கூட அவர்களது நோக்கம் என்னவென்று சொன்னால் தேர்தல் நோக்கம் கிடையாது. எந்தவொரு விடுதலைப்புலிகளோ அல்லது ஏனைய இயக்கங்களில் இருந்த எந்தவொரு போராளியும் அல்லது மாவீரர்களாக்கப்பட்டவர்கள் அல்லது மறைந்த போராளிகள் யாருமே இந்த தேர்தலுக்காக உயிரிழக்கவில்லை. தேர்தலுக்காக போராடவுமில்லை. அவர்கள் போராடியதற்கு காரணம் உரிமைப்போராட்டமே தமிழினத்தை அடைய வேண்டும் என்று நினைத்து தான் போராடினார்கள். எனவே குறைந்தபட்சம் நாங்கள் இன்று அரசியல் ரீதியாக தமிழ் மக்களுக்கான உயர்ந்தபட்ச அதிகாரங்களை பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் ஒன்றிணைவதை விட்டுவிட்டு தேர்தலுக்காக நாங்கள் டெக்னிக்கல் ரீசனில் பிரிகின்றோம் என்று சொன்னால் அதை யார் ஏற்றுக்கொள்வார்கள்.

**கேள்வி : இது அரசாங்கத்தினுடைய பின்னணி என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?**

பதில் : அதைத்தானே நான் கூறினேன் இந்த ஊடுறுவிகள் எப்படிவந்தார்கள் என்பதில் எனக்கு சந்தேகம் இருக்கின்றது என்று. தமிழரசுக் கட்சியினூடாக வந்திருக்கலாம் அல்லது ஒவ்வொரு கட்சியினூடாகவும் வந்திருக்கலாம். எங்களுடன் இருந்தவர்களை வெளியேற்றும் பொழுது எங்களது கட்சியிலிருந்த கொள்கைகளுக்கு முரணானவர்களை வெளியேற்றுவோம். அல்லது எங்களது கட்சியில் இருந்து முரண்படுகின்றவர்கள் வெளியேறுவார்கள். எனவே முரண்படுகின்றார்கள் என்றால் அவர்கள் வேறு கருத்தைக்கொண்டிருக்கின்றார்கள் என்று தான் அர்த்தம்.

**தொடரும்**

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## தென்னிலங்கை அரசியலை கவிழ்க்க தமிழ் அரசியல் தரப்பிடம் என்ன உத்தி உள்ளது

இன்றைய அரசியல் சூழ்நிலையில் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நோக்கிய காய் நகர்த்தல்கள் நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக இந்தநாட்டின்ஜனாதிபதியைபொறுத்தவரையில் மக்கள் வாக்களிக்காமலேயே பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் ஆக்கப்பட்டவர். நலிவடைந்துபோன இவரது ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் தூசு தட்டி எடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே தற்போதைய தேர்தல் அரசியல் நகர்வுகள் கருதப்படுகின்றது. உள்ளூ ராட்சி மன்றங்கள் நடத்துவதற்கு ஆயிரத்து நூறு கோடி தேவைப்படுமிடத்து அது எங்கிருந்து எப்படி வரப்போகின்றது என்பதற்கப்பால் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என்ற ஒரு நிலைமை தோற்றிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக கட்சிகளும் தமது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ள நிலையில் ரணில் விக்ரமசிங்க மகிந்தவுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களில் களமிறங்கியுள்ளார்.

அதே நேரம்மைத்திரிபால சிறிசேன, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச தலைமையில் சுதந்திர மக்கள் கூட்டணி என்ற பெயரில் 13 கட்சிகள் 36 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இணைந்துகொள்கின்றனர். அதே நேரம் சஜித் பிரேமதாஸ ஐக்கிய மக்கள் சக்தியிலும் அனுரகுமார திஸாநாயக்க அவர்கள் மக்கள் விடுதலை முன்னணியிலும் தனித்து போட்டியிடுகின்றனர். எது எவ்வாறிருப்பினும் இன்று வடகிழக்கில் தமிழ் கட்சிகளின் நிலைமையை பார்க்கின்ற பொழுது அவர்களின் ஒற்றுமையின்மை நன்கு புலப்படுகின்றது. அந்த ஒற்றுமையை பலப்படுத்தும் நோக்கிலே தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் 68 வீதமான பாராளுமன்ற வாக்குகளை பெற்று 22 பாராளுமனற் ஆசனங்களை கைப்பற்றின இதுவொரு முன் உதாரணம். அதன் பின்னரான தேர்தல்களில் எல்லாம் தமிழ் தேசிய கூட்டமைப்பை சிதறடிக்க வேண்டும் என்ற நோக்கிலே மாறி மாறி வந்த அரசாங்கங்கள் செயற்பட்டிருந்தன. அதனுடைய அதிகூடிய விளைவே இன்று தமிழரசுக் கட்சியில் பங்காளி கட்சிகளாக இறுதியாக இருந்த ரெலோவும் புளெட்டும் சேர்ந்து சென்றிருக்கும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

தென்னிலங்கையில் ஒற்றுமையுடன் கட்சிகள் ஏதோவொரு வகையில் செயற்பட்டு தமக்கான ஒரு நிலையை எடுத்துக்கொள்கின்றார்கள். அதே நேரம் தமது தேவைக்காக எதிர்கட்சியை கூட தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வழங்கினார்கள். நல்லாட்சி அரசாங்கம் என்ற போர்வையில் தமிழினத்திற்கு சலுகைகளை வழங்குவதான ஒரு நாடகத்தை நடத்தி கட்சிகளை சின்னாபின்னமாக உடைக்கும் தந்திரோபாயத்தினை அவர் மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டுள்ளார். இனி இந்த நாட்டில் ஆளும்கட்சி எதிர்கட்சி என்ற ஒன்று மட்டுமே இருக்குமளவிற்கு தற்பொழுது கட்சிகளை ரணில் அவர்களே சிதறடித்துள்ளார். தமிழ் தரப்பை பொறுத்தவரையில் நாம் தென்னிலங்கை கட்சிகளை சிதறடிக்கும் ஒரு வேலைத்திட்டத்தில் இறங்கினால் மட்டுமே எமக்கான தீர்வு திட்டத்தை நோக்கி நகர முடியும். அரசியலில் வெற்றி பெறுவது என்பது சகஜமான ஒன்று ஆனால் சதி செய்வது என்பது அல்லது ஒரு கட்சியை இல்லாது ஆக்குவது என்பது அந்த இனத்தை அழிப்பதற்கு ஒப்பானது. அந்த நடவடிக்கையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் துரிதமாக மேற்கொண்டுவருகின்றார்.

ஆகவே நாம் தென்னிலங்கையில் இருக்கக்கூடிய கட்சிகளை சிதறடிக்கும் வேலைத்திட்டங்களை வடகிழக்கிலிருந்து மேற்கொள்ள வேண்டும் அவ்வாறு இல்லையேல் மற்றுமொரு ஆயுத போராட்டம் இந்த நாட்டில் உருவாகுவதற்கு தென்னிலங்கையில் இருக்கக்கூடிய பேரினவாத கட்சிகள் தொடர்ந்தும் முயற்சிப்பார்கள். ஆகவே சிந்திப்போம் செயற்படுவோம்.

203

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



சூட்டுக்கு வேகமாகத் தயாராவதற்கும் தோள்மூட்டில் ஆயுதத்தைப் பொருத்துவதற்குமுரிய நேரத்தைச் செலவழி க்காமலிருப்பதற்காகவும் தோள்மூட்டிலிருந்து சுடுகலனை விடுவிக்காவண்ணம் சுடுகுழல் சற்றுக் கீழ்நோக்கியவாறிருக்கும்படி பிடித்துக்கொண்டு நகரவேண்டும். இந்நிலையிலிருந்து சூட்டாளன் வேகமாக நிலையெடுப்பதுடன் குறிபொருத்திய சூட்டையும் மேற்கொள்கின்றான்.

நிச்சயமாக வயிற்று மட்டத்திலிருந்தும் சூட்டை மேற்கொள்ளலாம். ஆனால் முதலாவது சூட்டிலேயே இலக்கை அழிப்பதானால் மிகக் குறைந்த தூர இடைவெளியில் (5 - 10 மீற்றர்) மாத்திரமே சாத்தியமாகும். வயிற்றிற்குக் கிட்ட சுடுகலனைப் பிடித்துச் சுடுகின்ற சூட்டுப் பயிற்சியில் சிறப்பாகப் பயிற்சியெடுத்த சிறந்த சூட்டாளர்கள் 20 -50 மீற்றர் தூர இடைவெளியில் ஆளுயர இலக்கை முதலாவது சூட்டிலேயே அழிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். இலக்கு இன்னமும் தொலைவிலிருக்குமானால் கணிசமான அளவு (5 - 10) சூட்டினால் மாத்திரமே அழிக்கலாம். அல்லது பாதைச்சுட்டி ரவையாலோ சூட்டினால் ஏற்படுகின்ற மண் தெறிப்பினாலோ மாற்றத்தைச் செய்தே அழிக்கலாம்.

பதுங்கிச் சுடுபவனின் தந்திரங்கள்

பதுங்கிச் சுடுபவன் கட்டளையாளனுக்குக் கிட்டவாக இருப்பதே மிகச் சிறந்ததாகும். அவன் முக்கிய இலக்குகளை அழிப்பவன் மாத்திரமல்லாமல் அவதானிப்பாளனும் கட்டளையாளனின் காவலாளனுமாவான். எதிரிமீது எதிர்பாராத தாக்குதலைத் (திடீர்த்தாக்குதல், பதுங்கித் தாக்குதல், தேடுதல் போன்றவாறானவை) தொடுக்கின்ற சமயங்களில் பதுங்கிச் சுடுபவன் எதிரியின் மத்தியில் மற்றைய எதிரிகளைவிட வேகமாக நிலைமையைப் புரிந்து பதில் தாக்குதல் தொடுக்க முயற்சிக்கின்றவர்களையும் எதிர்ப்பை வெளிப்படுத்துபவர்களையும் இனங்கண்டு அவர்களை அழிக்கவும் வேண்டும்.

பதுங்கிச் சுடும் தொழிலில் உள்ள தந்திரங்களும் உத்திகளும் ஒரு சிறந்த பதுங்கிச் சுடுபவர் புத்தகமொன்றை எழுதுவதற்குப் போதுமான அளவிற்கு இருக்கின்றன. ஆனால் இந்தப் புத்தகம் பிற பதுங்கிச் சூட்டாளர்களுக்குப் பொருத்தமானதாக இருக்காது. எடுத்துக்காட்டாக ரசியப் பாதுகாப்புச் சபை உட்துறையமைச்சு போன்றவற்றில் பணியாற்றுகின்ற பயங்கரவாத எதிர்ப்புப் படைப்பிரிவுகளின் பதுங்கிச் சுடுபவர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த 100 - 200 மீற்றர் தூ ரங்களில் நகர்ப்புறங்களில் செயற்படுகின்றனர்.

பொதுப்படைப் படைப்பரிவைச் சேர்ந்த பதுங்கிச் சுடுபவர்கள் பொதுப்படைச் சமர்ச் சூழ்நிலைகளில் 400 - 600 மீற்றர் தூரங்களில் சுடப் பழகுகின்றனர். இராணுவ கடற்படைச் சிறப்புப் படைகளின் பதுங்கிச் சுடுபவர்கள் தமது செயற்பாட்டுச் சூழ்நிலையில் (மலைகள், கடற்கரை, காடுகள், சமவெளிகள் போன்றவாறானவை) கூடிய தூர இடைவெளியில் பணியாற்றுகின்றனர். ஆகவே தான் பதுங்கிச் சுடுபவர்களுக்குப் பொதுவான பரிந்துரையைத் தருவது கடினமாக இருக்கின்றது. இரண்டு பரிந்துரைகளை மாத்திரமே கூறுகின்றேன். அவற்றின் நியாயத்தைக் கண்டு நானே வியந்திருக்கின்றேன்.

நீர்ப்பிரதேசங்களுக்கு மேலாகச் சூட்டை மேற்கொள்கின்றபோது சற்றுக் கூடுதலான உயர்வுக் கோணத்தில் (மேலே குறிபொருத்தல்) பார்க்க வேண்டும். ஏனெனில் நீரினால் ஏற்படுகின்ற குளிர்காற்றும் ஈரப்பதனும் ரவையின் எறியப் பாதையைக் குறைக்கின்றது.

மலைப்பகுதிகளில் மிகவும் தெளிவான காற்றாதலால் இலக்கு வரையான தூ ரத்தைக் கணிப்பதில் (குறிப்பாகக் கணவாய்களுக்கூடாகச் சூட்டை மேற்கொள்கின்றபோது) தவறு (இலக்கு கிட்ட இருப்பது போல் இருக்கும்) ஏற்படுகின்றது. சாய்வான இடங்களில் மேலேயும் கீழேயும் அவதானிக்கின்றபோது இடைவெளி குறைவு போலத் தோன்றும். இதுவும் குறிபொருத்தலில் தவறேற்படச் செய்துவிடுகின்றது.

செச்னியப் போரின்போது மக்கள் வாழ்விடங்களில் மேற்கொள்ளப்பட்ட சமர் நடவடிக்கைகளின்படி, இராணுவ மற்றும் சிறப்புப் படைப்பிரிவுகளின் உத்தியோகபூர்வக் கட்டமைப்பு எண்ணிக்கையைவிடக் கூடுதலாகப் பதுங்கிச் சுடுபவர்களைக் கொண்டிருக்கவேண்டியதன் அவசியம் புரிந்துகொள்ளப்பட்டது. இடையிடையே பதுங்கிச் சுடுபவர்களால் மாத்திரமே போராளிகளின் சூட்டு நிலைகளை முற்கூட்டியே இனங்கண்டு அழிக்கக்கூடியதாக இருந்ததுடன் நெருக்கமாகக் கட்டடங்கள் நிறைந்த இடங்களில் பதுங்கிச் சுடுபவர்களுக்கெதிரான சண்டையை மேற்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

போதியளவு எண்ணிக்கையில் பதுங்கிச் சுடுபவர்கள் இல்லாமை இரவுப் பார்வைச் சாதனம் பொருத்தக்கூடிய வசதியைக் (பொருத்து முளை) கொண்ட சுடுகலன்களில் ஒளியியல் குறிகாட்டிகளைப் பொருத்த நிர்ப்பந்தித்தது. ஏ.கே. - 74 இல் எறிகணை செலுத்திக்கான ஒளியியல் குறிகாட்டி பி.ஜி.ஓ. - 7 பொருத்துவதால் 300 - 400 மீற்றர் தூரத்திற்கு பதுங்கிச் சுடுகலன் சூடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. டிரகுனோவின் பி.எஸ்.ஓ. - 1 ஒளியியல் குறிகாட்டியைப் பயன்படுத்தி ஏ.கே சுடுகலனால் 500 - 600 மீற்றர் தூரத்திற்குத் துல்லியச் சூட்டை மேற்கொள்ளலாம். எதிர்பாராதவிதமாக பாதுகாப்பு அமைச்சின் வேவுப் படைப்பிரிவுகள், பாதுகாப்புச் சபையினதும் உட்துறை அமைச்சினதும் சிறப்புப் படைப்பிரிவுகள் போன்றவற்றினது படைக்கலனிலுள்ள சிறப்புப் பதுங்கிச் சுடுகலன் வி.எஸ்.எஸ் ('வின்தரேஸ்') பிரசித்தமடைந்துவிட்டது.

நகர்ப்புறத்தில் சண்டை செய்வதற்குச் சிறந்த ஆயுதமாக வி.எஸ்.எஸ் விளங்குகின்றது. அடக்கமான இலகுவான சத்தமற்ற இரவிலும் பகலிலும் குறிபொருத்தக்கூடியதான இந்தச் சுடுகலன் 300 மீற்றர் வரையான தூரத்திற்கு (வி.எஸ்.எஸ். இற்கான அறிவுறுத்தலில் குறிபொருத்தல் தூரம் 400 மீற்றர் எனக் குறிக்கப்பட்டுள்ளபோதும்) மிகத்துல்லியமான சூட்டை இரவிலும் பகலிலும் மேற்கொள்ள உதவுகின்றது.

இதனை ஆயுதமாகக் கொண்டிருக்கின்ற பதுங்கிச் சுடுபவனை எதிரி கண்டுகொள்ளவோ காதால் சத்தத்தைக் கேட்டுக்கொள்ளவோ மாட்டான். பிரதேசத்திலும் கட்டடங்களிலும் மறைப்பாகத் தேடுதல் மேற்கொள்ள இந்த ஆயுதம் பயன்படுத்தப்பட்டது.

வேவுகாரர்கள் தங்களைக் காட்டிக்கொள்ளாமல் சந்தேகத்திற்கிடமான இடங்களுக்கு அங்கே எதிரி மறைந்துள்ளானா என்பதை அறிவதற்காக வி.எஸ்.எஸ் இனால் சூடுகளை மேற்கொண்டார்கள். இது தவிர சத்தம் சந்தடியின்றிக் கண்ணிகளை அகற்றுவதற்காகவும் வி.எஸ்.எஸ் பயன்படுத்தப்பட்டது. கண்ணியைக் கண்டுகொண்டபின் பாதுகாப்பான தூரத்திலிருந்து வேவுவீரர்கள் அதனைச் சுட்டார்கள். வழக்கமாகக் கண்ணிகளும் சுயதயாரிப்புக் கண்ணிகளும் தகர்ப்புவேலையின்றித் தகர்க்கப்பட்டன.

வி.எஸ்.எஸ் பதுங்கிச் சுடுகலனிற்கும் இதனது அடிப்படையில் உருவாக்கப்பட்ட சிறப்புச் சுடுகலன் ஏ.எஸ். ('வால்' - 'பேரலை') இற்கும் லேசர் இலக்குச் சுட்டிக்காட்டல் பொருத்தப்படுகின்றது. இலக்குச் சுட்டிக்காட்டல் கதிர்களை இரவில் இரவுப் பார்வைச் சாதனங்களால் மாத்திரமன்றிச் சாதாரண கண்களாலும் கண்டுகொள்ளலாம்.

குறிப்பாக வளிமண்டலத்தில் தூசி அல்லது புகார் இருக்கின்ற போதாகும் ஒரு சமயத்தின்போது இரவில் செயற்பட்ட எமது வேவுக்குழு செச்னியப் பதுங்கிச் சுடுபவனுடன் முட்டுப்பட்டது. 'வின்தரேசை' ஆயுதமாகக் கொண்ட எங்களது மூன்று பதுங்கிச் சூட்டாளர்கள் அவனுடன் இரு தரப்புச்சண்டையைத் தொடங்கினர். ஆனாலும் இலக்குச் சுட்டிக்காட்டல் கதிர்கள் நன்றாகத் தெரிந்தன. இதனைக் கொண்டு தன்னை நோக்கிக் குறிபொருத்துவதை அறிந்த செச்னியன் தனது நிலையை மாற்றத் தொடங்கினான். இறுதியில் இரவுச் சூட்டுக் குறிகாட்டி பொருத்திய சாதாரண ஏ.கே சுடுகலனால் குழுக் கட்டளையாளன் எதிரியைக் களைந்தான்.

உயரமான வேலிகளைக் கடப்பதற்கும் கட்டடச் சுவர்களில் (கல், செங்கல், கொங்கிரீட்) ஏறுவதற்கும் டிரகுனோவ் பதுங்கிச் சுடுகலனை வெற்றிகரமாகப் பயன்படுத்தலாம். இதற்காக உருக்கு உள்ளுடலைக் கொண்ட ரவை (ரவையின் முனையில் வெள்ளி நிறப்பூச்சுக் காணப்படும்) அல்லது கவசத்துளைப்பு - எரியூட்டல் ரவையினால் ஒன்றுக்கொன்று சாய்வாக இரண்டு சூடுகள் மேற்கொள்ள வேண்டும்.

சுடப்பட்ட துவாரத்தினுள் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட ஆதாரக் கம்பியைப் பயன்படுத்திச் சுவரில் ஏறலாம். இதற்காக உருமறைப்புத் தொகுதியுடன் வருகின்ற கம்பி (கவசவாகனங்களையும் கட்டடங்களையும் உருமறைக்கப் பயன்படுத்தப்படுகின்ற 'எம்.கே.எஸ்' உருமறைப்பு வலைத்தொகுதி) நன்றாகப் பொருந்துகின்றது.

**சமரில் ஒருங்கிணைந்த செயற்பாடுகளின் ஒழுங்குகள்**

சமரில் சண்டைச் சோடிகளான இருவராகச் செயற்பட வேண்டும். ஒருவருக்கொருவர் காப்பு வழங்கியபடி மூவராகச் செயற்படுவது இன்னமும் நல்லதும் நம்பிக்கையானதுமாகும். சாத்தியத்தைப் பொறுத்து கையெறிகுண்டுகளையும் சுடுகலனின்கீழ் பொருத்துகின்ற எறிகணைகளையயும் கூடுதலாகப் பயன்படுத்துங்கள். இருக்கின்ற சகல சூட்டுக் கருவிகளினதும் சூடுகளை எதிர்ப்புத் தோன்றுகின்ற இடங்களில் ஒன்றுகுவிக்க வேண்டும்.

தொடர்வான்....



# ஜனாதிபதி ரணிலின் சூழ்ச்சி வலையில் சிக்கித்தவிக்கும் கட்சிகள்

இன்றைய சமகால அரசியல் பார்வையிலே உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக கலைகட்டியிருக்கின்றது. அந்தவகையில் கட்சிகள் ஒவ்வொன்றும் தமது கட்டுப்பணத்தை செலுத்திவருகின்றார்கள். இந்த நிலையில் தென்னிலங்கையிலும் சரி வடக்கு கிழக்கிலும் சரி கட்சிகளிடையே ஒரு குழப்பத்தை உருவாக்கும் நிலைமை தற்பொழுது இந்த நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் முடக்கிவிட்டிருக்கின்றார் என்பது தெள்ளத்தெளிவாக தெரிகின்றது. இதற்கு இந்த தமிழ் கட்சிகளும் மற்றும் முஸ்லிம் கட்சிகளும் மற்றும் தென்னிலங்கையில் இருக்கும் கட்சிகளும் பலிக்கிடாய்களாகியிருக்கின்றார்கள் என்பதும் இன்றைய சமகாலத்திலே இருக்கக்கூடிய உண்மையான நிலை. ஆகவே இதற்கு எப்படி இராஜதந்திரமான காய் நகர்த்தல்களை நகர்த்த வேண்டும் என்பதை நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அல்லதுபோனால் எமக்கு தொடர்ந்தும் வரும் பிரச்சனைகளில் இருந்து நாம் மீண்டுவர முடியாதவொரு சூழல் உருவாக்கப்படும். காரணம் என்னவென்றால் இன்றைய சூழ்நிலையை பார்க்கின்றபொழுது ரணில் விக்ரமசிங்கவை பொறுத்தவரையில் 2004 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்பொழுதுவரையுமான அவரது இராஜதந்திர நகர்வுகள் ஒவ்வொன்றும் மிக சுபீட்சமாக அதிலும் அவர் கத்தியின்றி இரத்தமின்றி தான் அவரது செயற்பாடுகள் நகர்த்தப்படுகின்றது. இவ்வாறு இருக்கும் பொழுது இந்த இராஜதந்திர நகர்வுகள் என்பது உண்மையிலே தமிழ் தேசிய கூட்டமைப்பையே இல்லாமல் செய்யும் அளவிற்கு இராஜதந்திரத்தை ரணில் விக்ரமசிங்க தான் ஆரம்பத்தில் இருந்து காய் நகர்த்தி இறுதியிலே கருணா பிள்ளையான் பிரிவுகளை ஏற்படுத்தி வடகிழக்கு பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி இறுதியில் இந்த போராட்டம் முள்ளிவாய்க்காலோடு மௌனிப்பதற்கான சூத்திரதாரியாக செயற்பட்டவர் ரணில் விக்ரமசிங்க அவர்கள்.

எனவே இந்த கட்சிகளுக்குள்ளே குற்றங்கள் குறைகளை கூறிக்கொண்டிருப்பதை விட அரசாங்கம் முன் நகர்த்தும் காய் நகர்த்தல்களுக்கு எதிராக அல்லது அதை மாற்றியமைப்பதற்கு அல்லது தமிழ் மக்கள் நலன் சார்ந்து எவ்வாறு எமது காய் நகர்த்தல்களை நகர்த்த வேண்டும் என்பது தான் தமிழ் தரப்பு சிந்திக்க வேண்டுமே தவிர வேறு எந்த மாற்று வழிகளாகவும் அதனை செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டால் அது எமக்கு நாமே குழிதோண்டி புதைக்கும் நடவடிக்கையாகத்தான் அது அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இவ்வாறிருக்கும்பொழுது இந்த கட்சிகளிடையே பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கி இன்று தமிழ்தேசிய கூட்டமைப்பில் இருக்கக்கூடிய பங்காளி கட்சிகளான ரெலோவும் புளொட்டும் இறுதியாக வெளியேறுகின்றது. ஏற்கனவே தமிழர் விடுதலை கூட்டணி வெளியேறியது. அதன் பின்னர் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெளியேறியது அதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப் வெளியேறியது. தற்பொழுது புளொட்டும் ரெலோவும் ஒரேடியாக வெளியேறி இருக்கின்றது. வெளியேறி ஆறு கட்சிகள் கொண்ட ஒரு கூட்டை இன்று அவர்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள். அதிலும் ஒரு கட்சி விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சி அதனை நிராகரித்து சென்றிருக்கின்றது. தனக்கான சரியான பதவிகளை வழங்கவில்லை என அதிலொரு குறைபாடு சொல்லப்படுகின்றது. தன்னை ஒரு பொம்மையாக வைத்து செயற்படுவதற்கு இந்த கட்சிகள் எத்தணித்தன அதுமட்டுமல்லாது ஜனநாயக போராளிகள் இவர்கள் இராணுவ புலனாய்வாளர்களுடன் சேர்ந்து செயற்படுவதாக நாங்கள் அறிந்திருக்கின்றோம். எனவே அவர்களையும் நாங்கள் இதிலிருந்து புறம் தள்ளுகின்றோம் இதைப்பற்றி பாடம் கற்க வேண்டியிருக்கின்றது என்று எல்லாம் கூறியிருக்கின்றார்கள். எனவே இவ்வாறெல்லாம் சதி செய்யப்பட்டிருக்கின்றது.

மறுபக்கத்தில் பார்க்கின்றபொழுது மணிவண்ணன் அவர்கள் திட்டமிட்டு தான் அங்கே சுமந்திரன் அவர்களால் அனுப்பப்பட்டு விக்னேஸ்வரனின் கூட்டை உடைப்பதற்கு அவரை வெளியேற்றுவதற்கு இவ்வாறான ஒரு இராஜதந்திரத்தை கையாண்டார் என்று கூட தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. எவை எவ்வாறாயினும் ஒரு இனத்தின் விடுதலைக்காக போராட்டத்திற்காக புறப்பட்ட ஆயுத குழுக்கள் அனைத்துமே தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்ற இலக்குடன் தான் அவர்கள் புறப்பட்டார்கள் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவே அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் தான் இன்று வடகிழக்கில் எடுத்துக்கொண்டாலும் இந்த போராட்டத்தில் சரித்திரம் படைத்த நாயகர்களாக இன்று 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்கள் தமிழ் மக்களுக்கான ஒரு விடிவு கிடைக்க வேண்டும் என்பதற்காக தங்களது உயிர்களை தியாகம் செய்திருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் மறந்து தற்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பு சின்னாபின்னமாக உடைபட்டு போவதற்கு தமிழரசுக் கட்சியினுடைய தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் காரணம் என்று கூறப்படுகின்றது. ஆனால் அதைவிட கூறப்படுகின்ற காரணம் என்னவென்றால் மாவை சேனாதிராஜா சரியானதொரு முடிவை எடுக்கவில்லை. அல்லது சம்மந்தன் ஐயா அவர்கள் முடிவை எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது. ஆனால் இங்கே வந்தேறிகள் என்று குறிப்பிடப்படுபவர்கள் தமிழரசுக் கட்சிக்குள் நுழைந்ததால் தான் தமிழரசுக் கட்சிக்குள் இருப்பவர்கள் கூடுதலாக அனைவருமே வந்தேறிகள் தான். வைத்திய கலாநிதி சிவமோகன் அவர்கள் ஈ.பி.ஆஅர்.எல்.எப் இல் இருந்து சென்றிருக்கின்றார். மன்னார் சாள்ஸ் அவர்கள் புளொட்டிலிருந்து வந்தவர். சாந்தி சிறிஸ்கந்தராசா அவர்களும் புளொட்டினுடைய பின்னணியில் இருந்து வந்தவர் அவரது குடும்பமே புளொட்டை பின்னணியாக கொண்டிருந்தது. சிறிதரன் அவர்கள் ஈபிஆர்எல்எப் ஊடாக ஆசனத்தை பெற்று வந்தவர். ரவிகரன் அவர்கள் மற்றும் சாணக்கியன் மட்டக்களப்பிலே சிறிலங்கா சுதந்திரகட்சியில் இருந்து வந்தவர். அதோடு சுமந்திரன் அவர்கள் யு.என்.பி யினுடைய பின்னணியிலே இந்த கட்சிக்குள் நுழைந்தவர் அதுமட்டுமன்றி ஜங்கரநேசனும் கூட பதவிக்காக தான் மாம்பழ சின்னத்திலே போட்டியிட சென்றவர் ஈபிஆர்எல்எப் அந்த ஆசனத்தை பெற்றவர். இவ்வாறு பார்க்கின்றபொழுது தமிழரசுக் கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் அனைவருமே வந்தேறிகளாக செயற்பட்டவர்கள் தான் இந்த கருத்துக்களை முன்வைத்து இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய கூட்டை உடைப்பதற்கு செயற்பட்டார்கள் என்பது ஒரு கருத்து.

குறிப்பாக பார்க்கின்ற பொழுது இந்த தேர்தல்களின் முறைமை வேறு ஆகவே இதற்காக வேறு உத்திகளை கையாளுகின்ற போது இந்த சிஸ்ட்டத்தை மாற்ற வேண்டும் என்று கூறினாலும்கூட ஏன் ஒற்றுமையாக இருந்தும் கூட செய்யலாம். ஒற்றுமையாக இருந்து அதற்கு முன்னர் அதை தீர்மானித்து செய்தால் கூட இவ்வளவு தூரம் இந்த பிரச்சனைகள் வருவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. இதனை மக்கள் மத்தியிலே ஒரு பிரச்சனையாக காட்ட வேண்டிய தேவையுமில்லை ஆனால் அரசியல் என்பது ஒரு பிரச்சனையாக காட்டினால் தான் அது அரசியலாக இருக்கும் என்பதும் ஒரு நடவடிக்கையாக இருக்கின்றது. ஆகவே இன்றைய சமகால அரசியல் பார்வையிலே உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தனது கட்சியை பலப்படுத்துவதற்காக நாடு முழுவதுமாக இந்த பிரிவினைவாதங்களை களமிறங்கியிருக்கின்றார். இதனூடாக கட்சிகளை உடைக்கின்றார் கட்சிகளை இணைக்கின்றார் முஸ்லிம் காங்கிரசை ஹிஸ்புல்லாவுடன் சேர்த்து இணைக்கின்றார். இப்படி எல்லாம் கிழக்கிலும் வடக்கிலும் அனைத்து இடங்களிலும் இவ்வாறு உடைப்பதற்கான வேலைகளை ஏற்படுத்தி ஏற்படுத்தி தனது கட்சியை வளம்பெறுவதற்காக செய்வதை இந்த கட்சிகள் உணராமல் இருப்பது என்பது கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. மகிந்தராஜபக்ச அல்லது கோட்டபாய ராஜபக்சவினுடைய அணி தமிழினத்தை அழிப்பதற்கோ அல்லது தமிழினத்துடன் போராடி வருவது என்பது நேரடியான விடயம் ஆனால் ரணில் விக்ரமசிங்க அப்படியல்ல உள்ளாளும் இருந்துகொண்டு சூழ்ச்சிகளை செய்து செய்து நிரந்தரமாகவே ஒரு இனத்தை இல்லாது அழிக்கின்ற நடவடிக்கைகளில் நேரடியாக களமிறங்கி இருக்கின்றார் என்பதிலே மாற்றுக்கருத்தில்லை.

எனவே இந்த கட்சிகள் தற்பொழுது கூறும் நொண்டிச்சாட்டு தமிழ் பரப்பில் இருக்கக்கூடிய கட்சிகளை சின்னாபின்னமாக்கிசிதைத்துவிட்டு இன்று மக்கள் மத்தியிலே பிரிவினையை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழரசுக் கட்சி அந்த குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள். அவர்கள் முன்வைப்பதிலே அது மக்களது கருத்தாடலாகவும் இருக்கின்றது. அதற்காக புதுக்குடியிருப்பு பிரதேசத்திலே இரண்டு தினங்களுக்கு முன்பு உண்ணாவிரத போராட்டத்தை ஒருவர் மேற்கொண்டிருந்தார். அதிலே பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள் அதில் கைச்சாத்திட்டிருந்தார்கள். அந்த நேரத்தில் குறிப்பாக நாங்கள் அவர்களுடைய ஒற்றுமையை பாதுகாப்பதற்கு செயற்படுவோம் என்றும் அவர்கள் கூறியிருந்தார்கள். நேற்றைய தினம் கூட கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு செயற்பாட்டில் விக்னேஸ்வரன் தலைமையிலாக கலந்துகொள்ளுகின்ற பொழுது அந்த கூட்டும் தற்பொழுது உடைந்து 5 கட்சிகள் இணைந்த கூட்டாக தற்பொழுது அமையப்பெற்றிருக்கின்றது காரணம் என்னவென்றால் அதில் மிக முக்கியமாக இருக்கின்ற மூன்று கட்சிகளும் இணைந்தால் கூட வடகிழக்கில் ஆசனங்களை கைப்பற்றமுடியும் என்பது தான் இன்றைய நிலை. இதில் தமிழரசுக் கட்சி ஒருவகையில் தோல்வியை தழுவிக்கொண்டால் அடுத்த மாகாணசபை பாராளுமன்றம் என்று செல்வதற்கு கூட இந்த கூட்டு கட்சிகளை இணைத்து செயற்பட முடியாத ஒரு சூழல் உருவாக்கப்படும் ஏனென்றால் அவர்கள் இறுதிவரை இவர்களுடன் கூட்டிணைவதற்கான வாய்ப்புக்கள் இல்லாது இருந்தால் ரெலோ, புளொட் ஈ.பி.ஆர்.எல்எப் இனுடைய கை மேலோங்கும் ஒரு நிலை உருவாகும் ஏனென்றால் ஏற்கனவே ரெலோ மூன்று ஆசனங்களை தன்வசம் வைத்திருக்கின்றது. புளொட் 2 ஆசனங்களை வைத்திருந்தது அதிலே வியாழேந்திரன் அவர்கள் பெல்டி அடித்து மறுபக்கத்திலே சென்றுவிட்டார். எனவே வடகிழக்கை பொறுத்தவரையிலே மஸ்தான் ஒரு ஆசனத்தை கைப்பற்றியிருக்கின்றார் அதுமட்டுமன்றி திலீபன் அவர்களுக்கு ஒரு ஆசனம் சென்றிருக்கின்றது. இந்த ஆசனங்களும் சர்ச்சைக்குரிய விடயங்களாக இருக்கின்றது. தமிழரசுக் கட்சியினுடைய ஆசனம் அதுமட்டுமன்றி அங்கஜன் இராமநாதன் என்று சிறிலங்கா சுதந்திர கட்சியிலே வடக்கிலே ஒரு வெற்றி கிடைத்திருக்கின்றது. ஆகவே தமிழ் தேசிய மக்கள் முன்னணி இரண்டு ஆசனங்களில் யாழ் மாவட்டத்திலே கைப்பற்றியிருப்பது என்பது இதுவும் அதனுடைய ஒரு வளர்ச்சிப்பாதை தான். இவ்வாறிருக்கும் நிலைமையிலே தமிழரசுக்கட்சி தான் ஒரு தனித்த ஒரு பார்வையை எடுத்து செல்வதன் ஊடாக தான் தனியாக களமிறங்கி குறித்த வட்டாரங்களில் முதன்மையாக வெல்ல முடியும் என்று எதிர்பார்த்து இந்த காய்கள் நகர்த்தப்பட்டது.

**தொடரும்...**

**துரியோதரன்**

# அரசதரப்பினால் பந்தாடப்படும் முஸ்லிம் கட்சிகள் – உள்ளூராட்சி சபை தேர்தல் சொல்ல போகும் செய்தி என்ன?



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் ரவூப் ஹக்கீம் ஒருபக்கம் கட்சியினுடைய உறுப்பினர்கள் இன்னொரு பக்கம் என சிதறி சின்னாபின்னமாகவிருந்த கட்சிக்குள் மீண்டுமொரு ஆணிவேர் சேர்ந்திருக்கின்றது என்ற தகவல்கள் தான் கிழக்கு இலங்கையிலே இன்றைய தினம் மிகப்பெரியளவில் பேசப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினுடைய ஆதிக்கத்தை காப்பாற்றிவந்த இரண்டு முக்கிய புள்ளிகள் தான் அலிசாகீர் மௌலானா மற்றும் காபீஸ் நஸீம் அகமட். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூலம் தேர்தலிலே போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவான காபீஸ் நஸீம் அகமட் 20 க்கு கையை தூக்கியதற்கு பின்னர் அவருக்கு பரிசாக ஒரு அமைச்சுப் பதவி கிடைத்தது அந்த அமைச்சுப்பதவியுடன் அவரது நாட்கள் வெகுவிமர்சையாக நகர்ந்து கொண்டிருந்தது.

ஆனால் காபீஸ் நஸீம் அவர்கள் 20 க்கு கையை தூக்கிய பின் அவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய மக்கள் அவர் தொடர்பிலே மிகப்பெரிய விரக்தியில் இருக்கின்றார்கள் என்பதனை யாருமே மறுக்கவும் முடியாது மறைக்கவும் முடியாது. இன்னொரு பக்கம் காபீஸ் நஸீம் அகமடினுடைய எதிர்கால அரசியல் மிகப்பெரும் கேள்விக்குறியாகிவிட்டது என்பதை அவரே உணர்ந்திருக்கவும் வாய்ப்புக்கள் இருக்கின்றது. இது இப்படியிருக்க அதே கட்சியினுடைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அலிஸாகீர் மௌலானா திடீரென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகிவிட்டார். விலகிவிட்டதன் பின்னர் ஒருபக்கம் காபீஸ் நஸீம் அவமடுக்கு எதிராக மக்கள் விரக்தி இன்னொரு பக்கம் அலிசாகிர் மௌலான விலகியதற்கான காரணம் என்ன என்பது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டத்திலே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினுடைய அரசியலும் அவர்களுடைய ஆதிக்கமும் மிகப்பெரியளவிலே வீழ்ச்சி கண்டிருந்தது. இந்த நிலையில் தான் மீண்டும் அலிசாகீர் மௌலானா சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஒருசில மாதங்களேயாகின்ற நிலையில் தற்பொழுது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து அரசியலை ஆரம்பித்து அந்த கட்சியினுடைய கொள்கை பிடிக்கவில்லை அதனுடைய தலைமை எனக்கு பிடிக்கவில்லை என்று வெளியில் வந்த எம்.எல்.ஏ ஹிஸ்புல்லா தற்பொழுது மீண்டும் அதே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்திருக்கின்றார் என்ற உறுதியான தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

இரண்டு வீடியோக்கள் வெளிவந்து இருக்கின்றன. அதில் அவர்கள் மாறி மாறி குறிப்பிட்ட விடயங்கள் **ரிஷாட் பதியூதின் :** வெட்கமில்லாமல் மேடையில் பச்சை சால்வையை போட்டிருக்கின்றார் பைத்தியக்காரன் மாதிரி. அன்புக்குரிய சாகோதரர்களே இந்த சமூகத்தினுடைய மிகப்பெரிய சாபக்கேடு அமைச்சர் ரவூப் ஹக்கீம். நாங்கள் அந்த கட்சிக்கு எதிரானவர்கள் இல்லை. இந்த சாபக்கேட்டை திறத்தியடிக்கவேண்டும் சகோரதரர்களே. இந்த சாபக்கேட்டிற்கு சரியான பதிலடி கொடுக்க வேண்டும். இந்த சாபக்கேட்டை போக்கடிக்க வேண்டும் சகோதரர்களே.

**ரவூப் ஹக்கீம்:** எங்கோ ஒரு இடத்தில் கேட்க வேண்டும் என்று இருக்கின்றான். போடுங்கோ என்று கொண்டுவந்து சேர்த்த கேஸ் தான் ஹிஸ்புல்லா. நல்ல பிள்ளை அரசியல் தெரிந்த ஆல் தான். சில விடயங்களில் சாதிக்கக்கூடிய திறமை இல்லாமலும் இல்லை. ஆனால் அபாண்டமும் புழுகும் அண்ட புழுகன். கண்டமாதிரி கதைப்பான் அண்ட புழுகில் மட்டுமல்ல நான் அதில் நல்லா விழுந்துவிட்டேன். கொஞ்சுவான் கொஞ்சல் ஐயோ. கையை பிடித்தால் விரல் மட்டும் மிஞ்சினால் போதும். அப்படி இறுக்கி பிடிப்பான். பிடித்து ஒரு கொஞ்சல் கொஞ்சுவான் அப்படியே நான் விழுந்து விடுவேன் அதோட. இப்படி நல்லா மாட்டியிருக்கின்றேன் நான். அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை அவர் பேசும் பேச்சு கொஞ்சம் பிசங்கி போனமாதிரி தான் விளங்குகின்றது. இல்லாவிட்டால் ஊழல் மாநாட்டை நடத்துவானா? அதன் மொத்த வடிவம் இவர். மாநாடு நடத்தியா அதற்கு விளக்கம் சொல்ல வேண்டும். எல்லாருக்கும் நல்லா விளங்கிவிட்டது. நீங்கள் ஒரு மாநாடும் நடத்த தேவையில்லை இருக்கும் இடத்தில் இருந்தால் சரி.

இப்படி மேடையில் ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிக்கொண்டு வசை பாடிக்கொண்டு தூ ற்றிக்கொண்டிருந்த இரண்டு பேரும் தான் தற்பொழுது ஒன்றாக சேர்ந்திருக்கின்றார்கள். எதற்காக என்று தெரியுமா எனக்காகவும் உங்களுக்காகவும் தான். அவ்வாறெனில் மக்களுக்காக மக்களினுடைய நலனுக்காகத்தான் இந்த இரண்டு பேருமே சேர்ந்திருக்கின்றார்கள். ஆனால் இந்த இரண்டு பேரினதும் கூட்டணி பொதுமக்களுக்கு நன்மை பயக்கின்றதோ இல்லையோ நிச்சயமாக அந்த இருவருக்கும் தனிப்பட்ட ரீதியிலே மிகப்பெரிய நன்மைகளை அள்ளிக்கொடுக்கப்போகின்றது. எதிர்வருகின்ற பிரதேசசபை தேர்தலை ஒருபுறம் வைத்துவிட்டு அடுத்தது நாடாளுமன்ற தேர்தலைப்பற்றி கொஞ்சம் சிந்தித்தால் இந்த ரவூப் ஹக்கீம் மற்றும் மஹிஸ்புல்லா கூட்டணி நாடாளுமன்ற தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டத்திலே மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. ஒருபக்கம் அலிசாகீர் மௌலானா இருக்கின்றார் இன்னொரு பக்கம் எம்.எல்.ஏ ஹிஸ்புல்லா இருக்கின்றார்.

இந்த இருவரும் மட்டக்களப்பு மாவட்டத்திலே இருக்கின்ற முஸ்லிம்களின் வாக்குக்கள் மூலம் நாடாளுமன்றம் செல்வதற்கான ஒரு உத்தியாக தற்பொழுது இந்த கூட்டணி சேர்ந்திருக்கின்றது. அவர்களின் எதிர்பார்ப்பு அப்படித்தான் இருக்கின்றது. இன்னொரு பக்கம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் காபீஸ் நஸீம் அவமட்டை அப்படியே மடக்கிப்பிடித்து வெளியாக்கிவிட வேண்டும். நாங்கள் ஹிஸ்புல்லாவை கொண்டுவந்திருக்கின்றோம் காபீஸ் நஸீமை வெளியேற்றிவிட்டோம் என்று நிச்சயமாக மேடையிலே ஒருநாள் ரவூப் ஹக்கீம் அவர்கள் பேசாமால் இருப்பதற்கு எந்த வாய்ப்புக்களுமே இல்லை.

இன்னொரு பக்கம் மட்டக்களப்பு மாவட்டத்திலே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸி னுடைய ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமாக குன்றிவந்த நிலையிலே தற்பொழுது இந்த கூட்டணி சேர்ந்ததன் காரணத்தால் மீண்டும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதிக்கம் மிகப்பெரியளவிலே வளர்ச்சி காணப்போகின்றது என்பது தான் யதார்த்தமாக இருக்கின்றது. இந்த கூட்டணியினுடைய யதார்த்தமான செயற்பாடுகள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸிற்கும் ரிஷாட் பதியூதினுக்கும் மிகப்பெரிய சவாலாக அமையப்போகின்றது என்பதிலும் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. எப்படிப் பார்த்தாலும் **அரசியலிலே நிரந்தர நண்பனும் இல்லை நிரந்தர எதிரியும் இல்லை என்பதைப்போலத்தான் தற்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான இந்த கூட்டணி எங்களுக்கு உணர்த்துகின்றது.**

ஏற்கனவே சொன்னது போன்று இந்த விடயத்தில் பொது மக்களுக்கு நன்மை இருக்கின்றதோ இல்லையோ நிச்சயமாக நாடாளுமன்ற உறுப்பினரான ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ ஹிஸ்புல்லாவிற்கும் இந்த கூட்டணி நிச்சயமாக நன்மை பயக்கப்போகின்றது. இறுதியாக மிகவும் சாதாரணமாக சொன்னால் இதிலும் ஏமாற்றப்பட்டிருப்பது சாதாரண பொதுமக்கள் தான். இந்த பதிவு வெறும் மேலோட்டமான பதிவு தான் அலிசாகீர் மௌலானா எம் எல் ஏ ஹிஸ்புல்லா ரவூப் ஹக்கீம் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் கிழக்கிழங்கை அரசியல் தொடர்பான ஒரு ஆழமான பதிவை அடுத்த பதிவில் தருவதற்கு நான் காத்திருக்கின்றேன் அது தொடர்பான தரவுகளை நான் இன்னமும் சேகரித்துக்கொண்டிருக்கின்றேன்.

இன்னொரு பக்கம் பழைய சாராயத்தை புதிய போத்தலில் ஊற்றி புதுசு என்று இன்னொருவருக்கு கொடுப்பதைப்போன்று தான் தற்பொழுது ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் ஒன்றாக சேர்ந்திருக்கின்றது எதிர்வரும் பிரதேச சபை தேர்தலுக்காகவேண்டி. மக்கள் ஆணையில்லாது அவர்களாக சேர்ந்து ரணில் தான் ஜனாதிபதி நாங்கள் கையை தூக்கிவிட்டோம் இனிமேல் அவர் சொல்வதைத்தான் நாங்கள் கேட்க வேண்டும் என ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்கி அவரிற்கு கீழ் அவர்களது அரசியலை அமைத்துக்கொண்டு தற்பொழுது இரண்டு கட்சிகளையும் ஒன்றாக சேர்த்திருக்கின்றார்கள். எதிர்வருகின்ற பிரதேச சபை தேர்தலில் நாங்கள் எவ்வாறு போட்டியிட வேண்டும் என்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் இன்றைய தினம் கொழும்பில் ஒரு பெரிய கூட்டத்தை நடத்தியிருந்தார்கள் கலந்துரையாடலுக்காக. அந்த கலந்துரையாடலின் முடிவிலே சில இடங்களிலே ஐக்கிய தேசிய கட்சி தனியாகவும் எஸ்.எல்.பீ.பீ தனியாகவும் போட்டியிட இருக்கின்றது. இன்னும் சில இடங்களிலே சேர்ந்து போட்டியிட இருக்கின்றார்கள். ஒரு பக்கத்திலே ஐக்கிய தேசிய கட்சியினுடைய யானை சின்னத்தில் தனியாகவும் இன்னொருபக்கம் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மொட்டு சின்னத்தில் தனியாகவும் இன்னும் சில இடங்களிலே கூட்டான ஒரு சின்னத்திலே போட்டியிடுவதற்கும் தயாராக இருக்கின்றார்கள்.

ஆனால் அந்த சின்னம் எது என்பது தொடர்பான எந்த முடிவும் இன்றைய தினம் எடுக்கப்படவில்லை. சாதாரணமாக சொல்லப்போனால் ஒரு காலத்தில் கோட்டபாய ராஜபக்ச எனும் பலம் பொருந்திய நபரை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக சந்தையில் விற்கப்பட்ட மிகப்பெரிய உணவுப்பொருள் தான் ரணில் என்னும் உணவுப்பொருள் ரணிலை பிடித்து சிறையில் அடைக்கவில்லை என்றால் எங்களுக்கு தூக்கம் வராது என்று சொன்ன மகிந்தானந்த அலுக்கமகேவாக இருக்கலாம். மத்திய வங்கியினுடைய கொள்கையை வெளிக்கொண்டுவராவிட்டால் இந்த நாட்டு மக்களுக்கு நாங்கள் மிகப்பெரிய சாபக்கேடாகிவிடுவோம் என்று கூறிய ஜோசப் பெர்னான்டோவாக இருக்கலாம் சாகீர் அகமட் டாக இருக்கலாம் இவர்கள் அனைவரும் சேர்ந்து தற்போதைக்கு ரணில் தான் நல்லவர் என தூக்கிப்பிடித்து தற்பொழுது ஒன்றாக சேர்ந்திருக்கின்றார்கள். இதை சரியாக சொன்னால் பழைய சாராயத்தை புதிய போத்தலில் போட்டு இது புதிய சாராயம் என விற்பது போன்று தான் இருக்கின்றது.

ஆனால் மக்கள் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். இந்த நாட்டை காப்பாற்றுவதற்காக எனக்கு வாக்கு தாருங்கள் என்று கோட்டபாய ராஜபக்ச வாக்கெடுத்து இந்த நாட்டை முழுமையாக அழித்திருந்தார். தற்பொழுது வீழ்ந்திருக்கின்ற பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எங்களுக்கு வாக்கு தாருங்கள் அதற்காக தான் நாங்கள் கூட்டு சேர்ந்திருக்கின்றோம் என்று இவர்கள் கூட்டணி சேர்ந்திருக்கின்றார்கள். ஆனால் பொதுமக்களுக்கு நன்றாக தெரியும் யார் இந்த நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டு செல்வதற்கு காரணமானவர்கள் என்பதை அவர்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கின்றார்கள். கூட்டணி சேர்ந்துவிட்டோம் புதிய இலட்சணை. புதிய கொள்கை. புதிய பரப்புரை. புதிய கருத்துக்கள். புதிய மேடைகள் என்பதற்கெல்லாம் ஏமார்ந்து உங்களுடைய வாக்குகளை விட்டுவிடாதீர்கள் .

**வல்லவன்**

# தமிழரசு கட்சியின் பிளவு!

# பலம் பெறும்

# தமிழ் தேசிய மக்கள் முன்னணி

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (Tamil National People's Front, TNPF) என்பது இலங்கைத்தமிழரைப்பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் இலங்கை அரசியல் கூட்டணியாகும். இக்கூட்டணி 2010 பெப்ரவரி 28 ஆம் நாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து உருவானது. இக்கூட்டணியின் தலைவராக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் இக்கூட்டணியின் உறுப்பினர்கள் ஆவர். இக்கூட்டணி 2010, 2015 நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டது. ஆனாலும் எவரும் வெற்றி பெறவில்லை.

2010 ஏப்ரல் 8 ஆம் நாள் நடைபெற்ற 2010 நாடாளுமன்றத் தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மட்டும் போட்டியிட்டு மொத்தம் 0.09% வாக்குகளைப் பெற்றது. ஆனாலும் நாடாளுமன்றத்திற்கு எந்த வேட்பாளரும் தெரிவு செய்யப்படவில்லை. 2015 ஆகஸ்ட் 17ஆம் நாள் நடைபெற்ற 2015 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி வட, கிழக்கு மாகாணங்களின் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிட்டு மொத்தம் 18,644 (0.17%) வாக்குகளைப் பெற்றது. ஆனாலும் நாடாளுமன்றத்திற்கு எந்த வேட்பாளரும் தெரிவு செய்யப்படவில்லை.

2020 ஆகஸ்ட் 5ஆம் நாள் நடைபெற்ற 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வட, கிழக்கு மாகாணங்களின் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிட்டு மொத்தம் 67,766 (0.58%) வாக்குகளைப் பெற்றது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஒரு ஆசனத்தையும், தேசியப் பட்டியல் மூலம் ஒரு ஆசனத்தையும் பெற்றது. அந்தவகையில் பார்க்கும் பொழுது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய அரசியல் பயணம் என்பது சற்று வித்தியாசமான ஒரு பாணியிலே இதுவரையிலும் பயணித்து வருகின்றது. அந்தடிப்படையில் பார்க்கின்ற பொழுது 2001 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தத்தின் பின்னரான காலகட்டத்தில் இடம்பெற்ற தேர்தலின் பொழுதிலும் கூட தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய இரண்டு உறுப்பினர்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சியினால் வெளியேற்றப்பட்டதன் பின்னர் அதனை தொடர்ந்து தமிழர் விடுதலை கூட்டணி தலைமையிலான ஆனந்த சங்கரியினுடைய கட்சியும் வெளியேற்றப்பட்டதன் பின்னர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி வெளியேற்றப்பட்டதன் பின்னர் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பாக அங்கு புளொட் ரொலோ இரண்டு கட்சிகளும் தமிழ் அரசியல் கட்சியுடன் இணைந்து கூட்டமைப்பாக பயணித்திருந்தனர். பயணித்திருந்த இந்த காலகட்டத்திலே தற்பொழுது 2023 ஆம் ஆண்டு பாரியதொரு பிளவு ஏற்படுகின்றது. அதுவும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான பிரச்சனையிலே கட்சிகள் தனித்து போட்டியிடுகின்றது.

ஆகவே விகிதாசார அடிப்படையிலும் ஏனைய விடயங்களிலும் தாம் தனித்து போட்டியிடுவதன் ஊடாக பெரும்பான்மையான வாக்குகளை பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நப்பாசையில் தமிழ் அரசியல் கட்சி எடுத்த முடிவு என்பது மக்கள் மத்தியில் பாரிய சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது. இதனூடாக சர்ச்சையை உருவாக்கிக்கொண்டாலும் ஒரு பகுதியில் அவர்கள் எவ்வாறாயினும் உள்ளூ ராட்சி மன்ற தேர்தல் ஊடாக அபிவிருத்தி திட்டங்களையும் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்ள முடியுமே தவிர இதில் இருந்து அரசியல் காய் நகர்வையோ அல்லது வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்துக்கான தீர்வையோ பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகும். காரணம் என்னவென்றால் இதிலே கொள்கை இல்லாத கட்சிகள் அனைத்துமே இந்த கட்சிகளில் இருந்து



கூட்டுக்கட்சிகளாக இருக்கின்ற பொழுது அவைகள் பிரிவடைந்து செல்கின்ற ஒரு சூழல் தான் உருவாகும் அவை காலத்துக்கு காலம் அல்லது 10 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது அது மாற்றம் பெறுகின்ற ஒரு நடவடிக்கையாகத்தான் அமைந்திருக்கும்.

ஆனாலும் கூட தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய அரசியல் காய் நகர்த்தல் என்பது தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் ஆயுத முனையில் போரிடாத ஒரு கட்சிகளாக இருந்தாலும் கூட இன்று நீங்கள் பார்க்கின்ற பொழுது அகிம்சை வழியிலே வந்த கட்சிகள் என்றடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகள் இருக்கின்றன. இவர்கள் குறிப்பாக ஒன்றிணையக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றனவா? என்று கேட்டால் அது உண்மையிலே இல்லை.

ஆனாலும் ஆயுத கட்சிகள் ஆறு அதனுடன் சேர்ந்து முன்னாள் முதலமைச்சர் மற்றும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் இணையும் பொழுது அது கூட்டுப்பலம் பெறும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனாலும் தற்பொழுது க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மணிவண்ணன் அவர்கள் இணைந்து தனித்து தேர்தலை எதிர்கொள்கின்றார்கள்.

ஆனால் பல போட்டியாளர்கள் அதாவது சிறந்த அரசியலிலே சிறந்த சாணக்கியமுடையவர்கள் கூட அந்த கட்சியில் போட்டியிட்டாலும் கூட தமிழ் தேசிய மக்கள் முன்னணி 2 ஆசனங்களை யாழ்ப்பாண மாவட்டத்திலே கைப்பற்றியிருந்தது என்பது தான் உண்மையிலே கடந்த பாராளுமன்ற தேர்தல் எடுத்துக்கொடுத்த பாடங்களாக இருக்கின்றன. அவர்களைப் பொறுத்தவரையிலே ஒரு தேசம் இரு நாடு என்ற ஒரு கோசத்தை அவர்கள் முன்வைத்தாலும் கூட காலப்போக்கிலே அவர்களுடைய அரசியல் கனவு நிறைவேறுமா? இல்லையா? என்பதற்கு அப்பால் தற்பொழுது இருக்கக்கூடிய சூழ் நிலையில் ஒரு தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டிலே அவர்கள் ஆயுத வன்முறையாளர்களை தம்முடைய கட்சிகளிலே இணைத்துக்கொள்வதில்லை அல்லது அவர்களுடன் இணைந்து செயற்படுவதில்லை என்பதிலே அக்காலகட்டத்திலும் அவர்கள் குறியாக இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய தேவை கருதி மட்டும் இந்த ஆயுத கட்சிகளை தமிழ் மக்களுடைய நலன் கருதி அல்லது தமிழ் மக்கள் பேரவை ஒன்றை உருவாக்குவதற்கு கூட்டாக ரெலோ,புளொட் ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகளையும் இணைந்து கொண்டார்கள். அவற்றை இணைந்து அவர்கள் செயற்பட்டுக்கொண்டும் இருந்தார்கள். அதிலே இருந்த ஏனைய ஆயுத கட்சிகளை துரோகி என்ற பெயருடன் அவர்களை வெளியேறுமாறு கூட விழித்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாக இருக்கின்றது.

இந்த அடிப்படையில் பார்க்கின்றபொழுது எந்த கட்சி தமிழினத்தின் விடிவிற்காக அல்லது தமிழ் மக்களுக்கான ஒரு வடகிழக்கிணைந்த தாயகம் மலர வேண்டும் என்பதற்காக இறுதிவரை குரல் கொடுத்து அவர்களுடைய அரசியல் காய் நகர்த்தல்களை நகர்த்திக்கொண்டு இருக்கின்றது என்ற வகையில் பார்க்கும்பொழுது அது தமிழ் தேசிய மக்கள் முன்னணியாகவே இருக்கின்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அந்த அணி தற்பொழுது தமது அரசியல் நடவடிக்கைகளை துரிதமாக தாம் நினைத்த அந்த தோரணையில் செல்வதற்கு தங்கு தடையற்ற ஒரு நிலைமை தற்பொழுது தோற்றிவிக்கப்பட்டிருக்கின்றது. அது என்னவென்றால் அதற்கு தமிழரசுக் கட்சி சிறந்த ஒரு வழியை எடுத்துக்கொடுத்திருக்கின்றது என்பது தான் இங்கே முன்வைக்கப்படும் ஒரு விடயம்.

ஒருவேளை தமிழரசுக் கட்சி கூட்டாக இணைத்துக்கொண்டிருந்த இந்த கட்சிகளை காலப்போக்கில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இணைத்துக்கொண்டால் அதனுடைய பலம் என்பது இன்னும் பலம் பெறும் என்பது பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் ஒருவேளை அந்த சாத்தியக்கூறுகள் கொள்கை நெறிப்பாடுகள் சரியாக இருந்தால் அரசியல் என்பது எதிரிகளை நண்பர்களாகவும் நண்பர்களை எதிரிகளாகவும் மாறுவதற்கான சூழ்நிலையாக தான் அரசியல் காய் நகர்த்தல்கள் நகர்த்தப்படுகின்றன.

ஏற்கனவே கூட்டமைப்பின் இணைப்புடன் இருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒருவேளை இந்த ஆயுத கட்சிகளை இணைத்துக்கொண்டும் பயணிப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் பல ஆய்வுகள் கூறுகின்றன. இருந்தும் சில கொள்கை ரீதியான பிரச்சனைகள் அதாவது ஏனைய ஆயுத கட்சிகள் கொலை கொள்ளை கற்பழிப்பு கப்பம் போன்றவற்றில் ஈடுபட்டார்கள். அவர்களுடன் தொடர்ந்தும் பயணிப்பது என்பது ஆபத்தானது என்றும் தேர்தல் மேடைகளிலே கூறுகின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணி எவ்வாறு இவர்களுடன் அடுத்த கூட்டை வைக்கப்போகின்றது என்பது ஒரு கேள்வியாக இருந்தாலும் கூட தமிழ் தேசிய மக்கள் முன்னணி வடகிழக்கிலே அதுமட்டுமன்றி மலையகத்திலும் தனது கட்சியினுடைய செயற்பாடுகளையும் முடக்கிவைத்திருக்கின்றது. அங்கும் அவர்கள் பலம் பெறுவதற்காக பலரையும் களமிறக்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இன்று தமிழினத்தை ஏமாற்றுகின்ற ஒரு செயற்பாடுகளிலே தமிழரசுக் கட்சி இறங்கியிருக்கின்றது என்பது பரவலான மக்களுடைய கருத்தாக இருக்கின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை சிதைப்பதற்கு இதுவொரு முதலாவது படியாக அமைந்திருக்கின்றது என்பது தான் அந்த கருத்தாடலாக இருக்கின்றது.

எனவே இதனை மாற்றியமைப்பதற்கான எத்தகைய ஒரு சூழலை இந்த தமிழரசுக் கட்சி இனி எடுக்கப்போகின்றது என்பது ஒரு கேள்வியாக இருக்கின்றது. இதன் பின்னணியிலே ரணில் விக்ரமசிங்க செயற்படுகின்றார். ரணில் விக்ரமசிங்கவிற்கு பக்கபலமாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களும் செயற்படுகின்றார் என்பது பொதுவான ஒரு குற்றச்சாட்டாக இருந்தாலும் கட்சிகளை பிளவுபடுத்துவது என்பது 2004 ஆம் ஆண்டிலிருந்து ரணில் விக்ரமசிங்க எடுத்துக்கொண்ட ஒரு மிகப்பெரிய உத்தியாகவே இதனை பார்க்கமுடிகின்றது. எனவே அவர் தற்பொழுது ஒரு ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு இவ்வாறு அதனை செய்வதனால் அவருக்கு உண்மையில் கட்சி பிளவுகளை ஏற்படுத்தினால் மட்டுமே வடகிழக்கிலே வெற்றிபெற முடியும் என்பது அவர்களின் நிலைப்பாடு காரணம் வடக்கு புலிகள் கிழக்கு புலிகள் என கருணா அவர்களை வைத்து ஒரு நாடகத்தை நடத்தியதன் ஊடாகவே இன்றும் கூட அந்த பிரதேசவாதம் அப்படியே இருக்க இந்த கட்சிகள் அனைத்தும் தூள் தூளாக உடைக்கப்படுகின்ற ஒரு சூழல் உருவாகியிருக்கின்றது.

அதே நேரம் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து தற்பொழுது பல கட்சிகள் உருவெடுத்திருக்கின்றன. அதிலே ஜனநாயக போராளிகள் தற்பொழுது ஒரு முன்னணி வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஜனநாயக போராளிகளும் கூட பல இராணுவ ஒட்டுக்குழுக்களுடன் தமது தொடர்புகளை வைத்திருக்கின்றார்கள் என்பது இங்கு நிதர்சனமான உண்மை. காரணம் இவர்களுடைய செயற்பாடுகளை மக்கள் அவதானிக்கின்றபொழுது மக்கள் அந்த விடயங்களை தெரிவித்திருக்கின்றார்கள்.

எனவே இந்த நாட்டிலே தமிழீழ விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கமாக இருக்கின்ற பொழுது விடுதலைப்புலிகள் அமைப்பிலுள்ளவர்கள் மாத்திரம் எவ்வாறு அந்த பெயரை பாவித்து அரசியல் நடவடிக்கைகளுக்காக களமிறங்க முடியும் என்பதும் கேள்வியாக இருக்கின்றது. ஆகவே இத்தகைய செயற்பாடுகள் ஊடாக தற்பொழுது கட்சிகளிடையே இருக்கக்கூடிய குழப்பத்தின் நிமித்தம் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பலம் பெறுகின்ற அல்லது அடுத்தவொரு எதிர்க்கட்சியாக கூட வரக்கூடிய வாய்ப்புக்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கொண்டிருக்கின்றது என்பது தான் இன்றைய நிதர்சனமான உண்மையாக இருக்கின்றது.

**நெற்றிப்பொறியன்**



# தென்னிலங்கை கூட்டும் வடக்கு,கிழக்கு கட்சிகளின் நகர்வும்

அரசாங்கம் அறிவித்ததற்கு அமைய உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தீவிரமாக முன்னெடுத்து வருவதை காணகூடியதாக இருக்கின்றது. தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை தடங்கலின்றி பெற்றுக்கொடுக்க முடியும் என திறைசேரி அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உறுதிப்படுத்தியுள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்ள முடியாது என வெளியாகின்ற கருத்துகள் தொடர்பில் திறைசேரி அதிகாரிகளை அழைத்து தேர்தல்கள் ஆணைக்குழு வினவிய போதே தேர்தல் என்பது அரசியலமைப்பு சார்ந்த விடயம் என்பதால், அதற்கு தேவையான நிதி எவ்வித தடையும் இன்றி பெற்றுக்கொடுக்கப்படும் என திறைசேரி அதிகாரிகள் அறிவித்துள்ளனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு உச்ச நீதிமன்றத்துக்கு வெள்ளிக்கிழமை (13) தெரிவித்ததை அடுத்து தேர்தலுக்கான மும்முரமான செயற்பாடுகளை கட்சிகளும் நகர்த்திக்கொண்டிருப்பதை காண கூடியதாக இருப்பதோடு உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ள சூழலில், வடக்கு கிழக்கில் மாத்திரமல்ல இலங்கை முழுவதும் அரசியற் கட்சிகள் பல கட்டப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருவதோடு தேர்தலுக்கான கட்டுப்பணங்களும் செலுத்தப்பட்டு வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காக கொண்டு **ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசிய கட்சியை ஒன்றிணைத்து பலமான கூட்டணி** ஒன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் அவதானம் செலுத்திவருவதோடு கூட்டணி அடிப்படையில் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடுவோம் என அரசாங்கத்தில் ஒரு தரப்பினரும், கட்சி என்ற ரீதியில் தனித்து போட்டியிடுவோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினரும் குறிப்பிட்டுள்ளார்கள். என செய்திகள் வெளிவந்தது இருப்பதை காண கூடியதாக இருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஐக்கிய தேசியக் கட்சி இன்று நாட்டில் பிளவுபட்டு பலமிழந்து போயுள்ள சூழலில், பாராளுமன்றில் பொது ஜன பெரமுன கட்சியின் பெரும்பான்மைப் பலத்தை நம்பியே தான், ஜனாதிபதியாக பதவியில் இருக்கின்ற நிலையில், பல விமர்சனங்களுடன் இதுவரை காலமும் இருந்து வந்த மஹிந்த மற்றும் ரணில் தரப்பு ஒன்றிணைந்துள்ளது.

சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அணியினர் தனித்து இத் தேர்தலை எதிர்கொள்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஒரு தலைமைத்துவத்தின் கீழ் இல்லாமல், தலைமைத்துவ சபை ஊடாக பரந்துபட்ட அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, சுதந்திர மக்கள் மற்றும் மேலவை இலங்கை கூட்டணி ஆகிய அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன. இந்த அரசியல் கூட்டணிக்கு **சுதந்திர மக்கள் கூட்டணி** என பெயரிட பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியினர், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தலைமையிலான மேலவை இலங்கை கூட்டணி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தரப்பினருடனான சுதந்திர மக்கள் சபை ஆகியோர் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணி அடிப்படையில் போட்டியிட தீர்மானித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச உட்பட்ட 10 அரசியற் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை சம சமாஜ கட்சி, தூய ஹெல மரபு, விஜயதரணி தேசிய சபை மற்றும் கடமை தேசிய அமைப்பு, சுதந்திர ஜனதா சபை, ஜன ஜன முன்னணி, இலங்கை மக்கள் கட்சி, நிதாஹஸ் ஜனதா முன்னணியும் "நிதாஹாஸ் ஜனதா சந்தனயா" என்ற பெயரில் கூட்டணியில் இருந்தது. இந்த கட்சிகள் ஒன்றாக இணைந்து கூட்டணி அமைத்து இத்தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகியுள்ளன.

**மக்கள் விடுதலை முன்னணி**யின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அணியினரும் உள்ளூராட்சி தேர்தலில் தனித்து போட்டியிட போவதாக கூறப்படுகின்றது. **ஜாதிக ஹெல உறுமய** கட்சியின் தலைவரான பாட்டாளி சம்பிக்க ரணவிக்க தனித்து உள்ளூராட்சி தேர்தலை எதிர்நோக்க இருக்கின்றார் என்பதும் பரவலாக பேசப்பட்டு வருகின்றது.

மறுபக்கத்தில் **ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்** மற்றும் ஹிஸ்புல்லா போன்றோர் மீண்டும் மறுபடியும் கூட்டுச்சேர்ந்துள்ளனர். இதற்கான பேச்சுக்கள் நடைபெற்று முடிந்துள்ளதாக அறிகிறோம். கூட்டணிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது மீண்டும் கட்சியில் ஹிஸ்புல்லா இணைந்துள்ளார். முஸ்லிம் மக்களுக்காக இந்த இணைவு என்கிறார். கிழக்கில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் உள்ள சபைகளை ஒட்டுமொத்தமாக கைப்பற்றுவதே இவர்களின் இணைவின் நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார். இவர்களுடன் முஸ்லிம் காங்கிரசில் இருந்து வெளியேறிய பலரும் இணைய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிகிறது. அரசியல் மேடைகளில் ஹிஸ்புல்லா மற்றும் ரவூப் ஹக்கீம் இருவரும் மாறி மாறி கடுமையான விமர்சனங்களை அன்று முன்வைத்து வந்தாலும் இன்றைய இக்கூட்டு கிழக்கில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும்.

க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான 4கட்சிகள் புதிய கூட்டணியாக உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்ள இருந்த நிலையில் அன்றைய(13) கட்சிகளின் கூட்டத்திலிருந்து தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் வெளியேறியதுடன் தொடர்ந்தும் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களுடன் அங்கு வந்திருந்து அதனை மேற்கொள்ள திட்டமிட்டனர். சில விடயங்களில் இணக்கம் ஏற்பட்ட போதும் பல விடயங்கள் முரண்பாட்டை தோற்றுவித்தது.

ஐந்து கட்சிகளின் கூட்டணியாக நாம் பேச்சுவார்த்தையை ஆரம்பித்த போது இன்றைய கூட்டத்தில் எமக்குத் தெரியாமல் திடீரென புதிதாக ஜனநாயக போராளிகள் கட்சியை அழைத்து வந்திருந்தனர். ஜனநாயகப் போராளிகள் கட்சி பல்வேறு குழுக்களுடன் தொடர்புடையதாக நான் அறிந்தேன். புலிகளாக இருக்கும் போது அவர்கள் எப்படி இருந்தார்கள் என்றும் தற்போது அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதனையும் நாம் அறிய வேண்டும். அவர்களை ஆறாவது கட்சியாக கூட்டணிக்குள் இணைக்கும் முடிவை ரெலோ, புளொட் தன்னிச்சையாக எடுத்தார்கள். ஆனால் நாம் அதனை ஏற்றுக் கொண்டோம். கூட்டணியின் பெயராக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என கட்சியின் பெயரை தெரிவித்து அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயல்படுவதாக முடிவு எடுக்கப்பட்டது. மேலும் கூட்டணியின் தலைமைப் பதவியினை விட்டுக் கொடுத்திருந்தோம். எனினும் சின்னம் அல்லது கட்சி செயலாளர் பதவியையாவது எமது கட்சிக்கு தருமாறு கோரினோம். அவர்கள் அதற்கு மறுத்ததால் நாம் கூட்டத்தில் இருந்து வெளியேறினோம். எதிர்வரும் தேர்தலில் மான் சின்னத்தில் தமிழ் மக்கள் கூட்டணி போட்டியிடும் என்பது குறிப்பிடதக்கவிடயம்.

மாவை சேனாதிராஜா தலைமையிலான **தமிழரசு கட்சி** தனித்து தேர்தலில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. டக்ளஸ் தலைமையிலான **ஈ.பி.டி.பி** தனித்து தேர்தலில் களமிறங்குவதோடு. கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான **தமிழ் தேசிய மக்கள் முன்னணி** தனித்து போட்டியிடுகின்றன.

**செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, த.சித்தார்த்தன் தலைமையிலான புளொட், சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப், வேந்தன் தலைமையிலான ஜனநாயக போராளிகள் என். சிறிகாந்தா தலைமையிலான தமிழ் தேசிய கட்சி** ஒரு கூட்டாக இணைந்து **இருக்கின்றது.**

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி, மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன இணைந்து புதிய கூட்டணிக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்த **கூட்டணி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு** எனும் பெயரில் குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் அன்று (14) இடம்பெற்ற விசேட கலந்துரையாடலுக்கு பின்னர் கட்சிகளின் தலைவர்களால் புதிய கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. கூட்டணி ஒப்பந்தத்தில் புளொட் சார்பாக த.சித்தார்த்தனும் ரெலோ சார்பாக செல்வம் அடைக்கலநாதனும் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பாக சுரேஷ் பிரேமச்சந்திரனும் தமிழ் தேசிய கட்சி சார்பாக என்.ஸ்ரீகாந்தாவும் ஜனநாயக போராளிகள் கட்சி சார்பாக வேந்தனும் கையெழுத்திட்டனர். புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் அன்று (13) இடம்பெற்ற கட்சிகளின் தலைவர்களால் எட்டப்பட்ட முடிவுக்கமைய ஒப்பந்தம் கைச்சாத்தானது.

அத்துடன் தமிழர் விடுதலை கூட்டணி தம்மிடம் தீர்வு திட்டம் உள்ளதாகவும் அதனை சரியான நேரத்தில் மக்களுக்கு தெரிவிப்போம் என தமிழர் விடுதலைக்கூட்டணி தெரிவித்துள்ளது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழு கூட்டம் வவுனியாவில் இடம்பெற்றது. கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கட்சியின் ஊடக பேச்சாளர் அருண் தம்பிமுத்து இவ்வாறு தெரிவித்தார். தமிழர் விடுதலைக்கூட்டணி தாயகப்பிரதேசத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தனித்து போட்டியிடவுள்ளோம். எம்மோடு இணைந்து செயற்பட அனைவரும் மீண்டும் வர வேண்டும் அதற்காக அனைவரையும் வரவேற்கின்றோம். என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலும்.வடக்கிலும் சிவனேசன்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைபுலிகள் கட்சி தனித்து போட்டியிடுகின்றது.கிழக்கில் 16 உள்ளூராட்சி மன்றங்களில் கணிசமான உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றுவோம் என்று கட்சி தலைவர் கூறியிருப்பது குறிப்பிடதக்க விடயமாக பார்க்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று சிதைப்பட்டிருப்பது மக்கள் மத்தில் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கின்றது. வீட்டு சின்னம் தான் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ற எண்ணத்தில் இருந்து மக்களை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றுவதற்கான உத்தியாக தென்னிலங்கை அரசாங்கத்தினால் த.தே.கூட்டமைப்பு பந்தாடுகின்ற ஒரு நிலை இருந்தாலும் தமிழரசு கட்சி தனது தனித்துவத்தை வெளிப்படுத்ததும் என்பதிலும் மாற்றுக்கருத்து இல்லை. யாழ்ப்பாணத்தில் தமிழரசு கட்சிக்கான தனி இடம் இருக்கின்றது. அது போன்று வன்னியிலும் மட்டக்களப்பிலும் திருகோண மலையிலும் தமிழரசு கட்சிக்கான இடம் அமைய பெறுமா? என்பது கேள்விக்குறியாக காணப்படுகின்றது.

குறிப்பாக புலம் பெயர் தளத்திலும் தமிழரசு கட்சிக்கான ஆதரவு இருக்க தான் செய்கின்றது. இந்த நிலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம் பெற இருக்கும் இடத்து அது தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டத்தை அபிவிருத்தி சார்ந்த விடயத்தை நோக்கி நகர்த்தப்படுமாக இருந்தால் தற்பொழுது நாடு சென்று கொண்டிக்கின்ற பொருளாதார நிலையில் இருந்து பாதுகாகக்கப்படும். என்பதே இன்றைய யதார்த்தமாக இருக்கின்றது.

**மாதூரி**

# பிராந்திய செய்திகள்

## லங்கா சதோச நிறுவனம் மேலும் நான்கு பொருட்களின் விலையை குறைத்துள்ளது



லங்கா சதோச நிறுவனம் நான்கு பொருட்களின் விலையை குறைத்துள்ளது. இதற்கமைவாக உள்நாட்டு சம்பா அரிசி 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன் புதிய விலை 220 ரூபாவாகும். 16 ரூபாய் குறைக்கப்பட்டுள்ள உள்நாட்டு பச்சரிசியின் புதிய விலை 189 ரூபாவாகும். அத்துடன் கோதுமை மாவின் விலை 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 240 ரூபாவாகும். உள்நாட்டு நாட்டரிசி 02 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 198 ரூபாவாகும்.

## 2023ஆம் ஆண்டுக்கான சீருடைகள் தொடர்பில் கல்வி அமைச்சரின் அறிவிப்பு

2023ஆம் ஆண்டுக்கான சீருடைகள் மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான வருடாந்த பாடசாலை சீருடைத் தேவையில் 70 வீதத்தை பூர்த்தி செய்ய சீன அரசாங்கம் இணங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதனுடன் தொடர்புடைய முதலாவது தொகை சீருடை தொகையை சீன அரசாங்கம் அன்று (13) கல்வி அமைச்சிடம் கையளித்துள்ளது.



## இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதியை அனுமதிக்க முடியாது

முட்டைகளை இறக்குமதி செய்யும் போது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதி கட்டாயம் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. முட்டையை இறக்குமதி செய்ய அரசு எடுத்த முடிவுடன் எடுக்கப்பட்ட விலைமனுக்களுக்கு முன் வந்த சர்வதேச விநியோகஸ்தர்களில் 90 சதவீதம் பேர் இந்திய விநியோகஸ்தராவர்.



முட்டைகளை இறக்குமதி செய்வதில் பிரச்சினை இல்லையென்றாலும் இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதியை அனுமதிக்க முடியாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார். எந்தவொரு நாட்டிலிருந்தும் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட நாடு பறவைக் காய்ச்சல் இல்லாத நாடாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். எவ்வாறாயினும், அண்மைக்காலமாக இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பரவி வருவதால், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு நாயகத்துக்கு தேவையான பரிந்துரைகளை வழங்க முடியாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எனினும், முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதி கட்டாயம் என்பதால், அதற்கான அனுமதியை வழங்குவதற்கு வர்த்தக அமைச்சின் தொழில்நுட்பக் குழு எழுத்துமூல அனுமதியை ஏற்கனவே கோரியுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.அத்தபத்து தெரிவித்துள்ளார்.

## கா.பொ.த உயர் தர பரீட்சை தொடர்பான அறிவிப்பு!

கல்விப்பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையை ஜனவரி 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் எச். ஜே. எம். அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். நாடு பூராகவும் 2200 பரீட்சை மத்திய நிலையத்தில் பரீட்சையை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி, 17ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி முதல் பரீட்சை முழுமையாக முடியும் வரை பரீட்சார்த்திகளுக்கான மேலதிக வகுப்புகளை ஏற்பாடு செய்தல் மற்றும் அந்த வகுப்புகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், பாடத்தின் விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துதல், மேற்படி தேர்வுகளுக்கான மாதிரி வினாக்கள் அடங்கிய வினாத்தாள்களை அச்சடித்து விநியோகித்தல், தேர்வுத் தாள்களில் உள்ள வினாக்களை விளம்பரப்படுத்துதல் அல்லது சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகள், மின்னணு, அச்சு ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல் இதுபோன்ற விடயங்களைச் செய்வது அல்லது வைத்திருப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு நபரோ அல்லது நிறுவனமோ அல்லது வேறு தரப்பினரோ இந்த உத்தரவுகளை மதிக்காமல் செயற்பட்டால், அந்த நபரோ அல்லது நிறுவனமோ அல்லது அந்த தரப்பினரோ குற்றவாளிகள் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு நபரோ அல்லது அமைப்போ அல்லது தரப்பினரோ இந்த உத்தரவுகளை மீறினால் அருகிலுள்ள பொலிஸ் நிலையம் அல்லது பொலிஸ் தலைமையகம் அல்லது இலங்கைப் பரீட்சை திணைக்களத்திற்கு பின்வரும் இலக்கங்களில் முறைப்பாடு செய்யுமாறும் அமித் ஜயசுந்தர பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகம் - 011 242 1111
பொலிஸ் அவசர அழைப்பு பிரிவு - 119
இலங்கை பரீட்சை திணைக்களத்தின் துரித தொலைபேசி இலக்கம் - 1911
பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம் - 0112 785 211 / 0112 785 212
பாடசாலை பரீட்சை அமைப்பு மற்றும் பெறுபேறு கிளை - 0112 784 208 / 0112 784 537

## யாழ்ப்பாணத்தில் 11 மாத குழந்தை துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணத்தில் பிறந்து 11 மாதங்களேயான பெண் குழந்தை, தாயின் சகோதரியின் கணவனால் ( பெரியப்பா) துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குழந்தையின் பிறப்புறுப்பு பகுதியில் வீக்கம் காணப்பட்டமையால் , குழந்தையின் தாய் குழந்தையை வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்று அனுமதித்துள்ளார். வைத்திய பரிசோதனையின் போது , குழந்தை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குழந்தையின் தாயின் சகோதரியின் கணவனே குழந்தையை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கினார் என கண்டறியப்பட்டது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## கோதுமை மாவின் விலை குறைப்பு!

புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் கோதுமை மாவின் விலை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விலை 195 முதல் 200 ரூபா வரை குறைந்துள்ளதாக புறக்கோட்டை மொத்த வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் கையிருப்பு அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம் எனவும், இதன் விலை குறைப்பை நீண்ட காலத்திற்கு எதிர்பார்க்க முடியாது எனவும் மொத்த வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.



## வெளிநாட்டு ஊழியர்களின் குடும்பங்களுக்காக நிவாரணத் திட்டம்

வெளிநாட்டு ஊழியர்களின் குடும்பங்களுக்காக நிவாரணத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் சுயதொழில் உதவிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது. அதன்படி, ஜப்பான், கொரியா மற்றும் அவுஸ்திரேலியா தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ள புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களின் ஒரு பிள்ளைக்கு 5,000 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

மேலும், வெளிநாட்டில் இருந்து வந்து 5 வருடங்கள் பூர்த்தியாகாத தொழிலாளர்களின் பிள்ளைகளும் பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொள்ளும் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என பணியகம் தெரிவித்துள்ளது. இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து வந்து 5 வருடங்கள் பூர்த்தியாகாத புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 50,000 ரூபா பெறுமதியான சுயதொழில் உதவி வழங்கும் வேலைத்திட்டத்தையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆரம்பித்துள்ளது. இந்த நிவாரணத் திட்டங்களுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் எனவும், இது தொடர்பில் தேவையான ஆலோசனைகளை பிரதேச செயலகத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# சினி துளிகள்




## ஆன்மீகத்தின் மீது அதிகம் ஈடுபாடு காட்டும் சமந்தா

நடிகை சமந்தா தற்போது myositis என்ற நோயால் பாதிக்கப்பட்டு அதற்காக சிகிச்சை பெற்று வருகிறார். அவர் தொடர்ந்து மருத்துவ சிகிச்சையில் இருப்பதால் அவரது முகம் மற்றும் தோற்றமே மாறி இருக்கிறது.

அவரது அழகும் பொலிவும் காணாமல் போய்விட்டது என சிலர் மீம் போட்டு விமர்சித்த நிலையில் சமந்தா அவர்களுக்கு பதில் கொடுத்து ஒரு பதிவும் போட்டிருந்தார். மேலும் சாகுந்தலம் படத்தின் விழாவில் அவர் கண்ணீர் விட்டது ரசிகர்களையும் கலங்கவைத்து இருக்கிறது.

சமந்தா உடல்நிலை பாதிக்கப்பட்டதில் இருந்து தொடர் சிகிச்சை பெற்று வருகிறார். வெளிநாட்டிற்கும் சென்று திரும்பி இருக்கிறார் அவர்.

இந்நிலையில் தற்போது சமந்தா ஆன்மீகத்தின் மீது அதிகம் ஈடுபாடு காட்டுவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. சமந்தா சாகுந்தலம் பட நிகழ்ச்சிக்கு வரும்போது கையில் ஜெப மாலை உடன் தான் வந்தார். அதன் புகைப்படங்களும் முன்பு வைரலானது குறிப்பிடத்தக்கது. விமான நிலையம் வந்த போதும் அவர் அந்த ஜெபமாலையை கையில் வைத்திருந்தார்.



## நடிகை ஐஸ்வர்யா லக்ஷ்மி கைதி பட நடிகருடன் காதல்!

பொன்னியின் செல்வன், கட்டா குஸ்தி போன்ற சமீபத்திய படங்களில் நடித்து இருந்தவர் ஐஸ்வர்யா லக்ஷ்மி. அவரது லுக் மற்றும் நடிப்பு எக்கச்சக்க ரசிகர்களை ஈர்த்து இருக்கிறது. வளர்ந்து வரும் நடிகையாக இருக்கும் அவர் தற்போது அவரது காதலரை அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

கைதி, மாஸ்டர் என பல படங்களில் நெகடிவ் ரோலில் மிரட்டிய அர்ஜீன் தாஸ் உடன் இருக்கும் போட்டோவை பதிவிட்டி ஒரு ஹார்டின் மட்டும் பதிவிட்டு இருக்கிறார்.

தற்போது அர்ஜீன் தாஸ் - ஐஸ்வர்யா லக்ஷ்மி ஜோடிக்கு வாழ்த்து குவிந்து வருகிறது.




## ஆர்ஆர்ஆர் திரைப்பட பாடலுக்கு கோல்டன் குளோப் விருது..!

இந்தியாவில் கடந்தாண்டு வெளியாகி மாபெரும் வரவேற்பைப் பெற்ற ஆர்ஆர்ஆர் திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த 'நாட்டு நாட்டு' எனத் தொடங்கும் பாடல், சிறந்த பாடலுக்கான பிரிவில் அமெரிக்காவின் 'கோல்டன் குளோப்' விருதை வென்றுள்ளது. இயக்குநர் எஸ். எஸ். ராஜமௌலி இயக்கத்தில், தெலுங்கு நடிகர்கள் ராம் சரண் மற்றும் ஜூனியர் என்டிஆர் நடிப்பில் ஆர்ஆர்ஆர் திரைப்படம் உருவானது. கடந்தாண்டு மார்ச் மாதம் தெலுங்கு, தமிழ், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் வெளியானது. இப்படத்துக்கு எம். எம். கீரவாணி இசையமைத்தார். திரையுலகின் உயரிய விருதுகளாக கருதப்படும் 'கோல்டன் குளோப்' மற்றும் 'ஆஸ்கர்' விருதுகளுக்கு பல்வேறு பிரிவுகளில் ஆர்ஆர்ஆர் திரைப்படம் போட்டியிட்டது. ஹாலிவுட் சீசனின் தொடக்க விழா எனக் கருதப்படும் அமெரிக்காவின் கோல்டன் குளோப் விருதுக்கு சிறந்த பிறமொழிப் படம் மற்றும் சிறந்த பாடல் உள்ளிட்ட 5 பிரிவுகளில் ஆர்ஆர்ஆர் பரிந்துரைக்கப்பட்டது.

இந்நிலையில், சிறந்த பிறமொழிப் படத்துக்கான விருதை 'ஆர்ஜெண்டினா, 1985' திரைப்படத்திடம் ஆர்ஆர்ஆர் பறிக்கொடுத்தது. ஆனால், இத்திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த 'நாட்டு நாட்டு' பாடல் சிறந்த பாடலுக்கான விருதை வென்றுள்ளது. எம். எம். கீரவாணி இசையமைத்து, சந்திரபோஸ் எழுதிய இப்பாடலை பாடகர்கள் கால பைரவா மற்றும் ராகுல் சிப்ளிகஞ்ச் பாடினர். பிரேம் ரக்ஷித் நடனம் அமைத்துள்ளார். துடிப்பான இசை, துள்ளலான நடனம் என இந்தப் பாடல் வெளியானபோதே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் நடைபெற்ற 80 ஆவது கோல்டன் குளோப் விருது வழங்கும் விழாவில் ஹாலிவுட் நடிகை ஜென்னா ஆர்டேகா சிறந்த பாடலுக்கான விருதை 'நாட்டு நாட்டு' பாடலுக்கு அறிவித்தார். படக் குழுவினருடன் விழாவில் பங்கேற்ற இசையமைப்பாளர் கீரவாணி, 'கோல்டன் குளோப்' விருதைப் பெற்று கொண்டார். அப்போது, அவர் பேசுகையில், இந்த விருதுக்கு முழுக் காரணமான இயக்குநர் ராஜமௌலிக்கு, அவரின் கனவுக்கு நன்றி எனக் குறிப்பிட்டார்.

இந்திய திரைப்படத்தின் பாடலுக்கு கோல்டன் குளோப் விருது வழங்கப்படுவது இதுவே முதல் முறை. இதையடுத்து, ஆர்ஆர்ஆர் திரைப்பட குழுவினருக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். 'கௌரவமிக்க இந்த விருது ஒவ்வொரு இந்தியரையும் பெருமைப்படுத்தியுள்ளது' என தனது வாழ்த்துச் செய்தியில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். நடிகர்கள் அமிதாப் பச்சன், ஷாருக்கான், சிரஞ்சீவி, கமல்ஹாசன், இசையமைப்பாளர் ஏ. ஆர். ரகுமான் உள்ளிட்டோர் ட்விட்டரில் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். ஆஸ்கர் விருதின் சிறந்த பாடல் பிரிவுக்கு இறுதி 14 பாடல்களில் ஒன்றாக 'நாட்டு நாட்டு' பாடலும் தேர்வாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. 1920 களில் வாழ்ந்த அல்லூரி சீதாராம ராஜீ, கொமரம் பீம் ஆகியோரின் வாழ்க்கையைச் சுற்றி பின்னப்பட்ட கற்பனைக் கதையாக ஆர்ஆர்ஆர் படம் உருவாக்கப்பட்டிருந்தது.




## வாரிசு படத்தை அடித்து நொறுக்கிய துணிவு

வாரிசு மற்றும் துணிவு இரு திரைப்படங்களும் கடந்த 11ம் திகதி வெளிவந்தது. கடந்த 9 ஆண்டுகளுக்கு பின் அஜித் - விஜய் படங்கள் ஒரே நாளில் வெளியாவதால் ரசிகர்கள் மத்தியில் மாபெரும் எதிர்பார்ப்பு இருந்தது.

இதில் வாரிசு சற்று கலவையான விமர்சனத்தை பெற்று வர, நல்ல படம் என்ற விமர்சனத்தை துணிவு பெற்றுள்ளது.

முதல் நாள் வாரிசு படத்தைவிட அதிக வசூல் செய்திருந்த துணிவு, இரண்டாவது நாளிலும் அதே இடத்தை தக்கவைத்துள்ளது.

ஆம், இரண்டாம் நாள் வசூலில் வாரிசு திரைப்படமே தமிழகத்தில் ரூ. 33 கோடி வசூல் செய்துள்ள நிலையில், துணிவு திரைப்படம் ரூ. 37 கோடி வரை வசூல் செய்து பாக்ஸ் ஆபிஸில் வாரிசு படத்தை முந்தியுள்ளது.



சிறிலங்கா தனது இராணுவப் பலத்தை பெருக்கிக்கொண்டிருக்கும் போது மறுதரப்பான விடுதலைப்புலிகள் அமைதியாக இருந்து விட்டால் அது அவர்களுக்கு பெரும் ஆபத்தாக முடிந்து விடும். சிறிலங்கா போர் ஒன்றை தொடுக்கும் போது அதனை எதிர்கொள்ள முடியாத ஒரு நிலையை விடுதலைப்புலிகளுக்கு ஏற்படுத்தி விடும் இதனால் தான் சமாதானத்துக்கான சரியான வழி எப்போதும் போருக்கு தயாராக இருப்பது தான் என்று அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் தெரிவித்தார்.

எனவே சிறிலங்கா பலத்தை பெருக்கிக்கொண்டு இருக்கும் போது விடுதலைப்புலிகள் மௌனமாக இருந்து விட முடியாது. அவர்களும் தமது படைவலுவை கட்டியெழுப்ப வேண்டியது சமாதான காலத்திலும் அவசியமாயிருந்தது. இந்த நிலையில் தான் தலைவர் அவர்களால் பால்ராஜ் தலைநகர் திருமலைக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்.

2004 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் திருகோணமலையில் தளபதி பிரிகேடியர் பால்ராஜ் கால் பதிக்கின்றார். வாகரையில் புதிய பயிற்சி தளங்களை அவர் நிறுவுகின்றார். போராளிகளுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கிழக்குக்கு தேவையான ஆயுத தளபாடங்களை தரை வழியாக கொண்டு சென்று சேர்ப்பதை விட கடல்வழியாக இறக்குவதே சுலபமாக இருந்தது. எனவே அந்த மாவட்டத்துக்கு தேவையான ஆயுதங்கள் கடல் வழியாக இறக்கப்படுகின்றன. பெருமளவு மோட்டார்கள் இறக்கப்பட்டு அதனை இலக்கு நோக்கி வீசுவதற்கான பயிற்சிகள் போராளிகளுக்கு வழங்கப்படுகின்றது. புதிய குறிசூட்டு (சினைப்பர்) அணியினர் உருவாக்கப்படுகின்றார்கள்.

குறிப்பிட்டு கூறுவதானால் பால்ராஜ் அவர்களின் வருகைக்கு பின்னர் விடுதலைப்புலிகள் படையணிகள் அங்கு பலம்பெறத் தொடங்கியிருந்தன. இதே வேளை சமாதான காலமான இக் காலத்தில் பிரிகேடியர் சு.ப. தமிழ்செல்வன் கிழக்கு மாகாணத்தை பார்வையிட சிறிலங்கா படை உலங்கு வானூர்தியில் திருகோணமலை சேனையூரில் வந்திறங்குகிறார். அவர் சம்பூர தொடக்கம் வாகரை வரை சென்று பார்வையிட்டு பொறுப்பாளர் தளபதிகள் ஆகியோரை சந்தித்து மக்களுடன் கலந்துரையாடுகிறார்.

இதேநேரம் சர்வதேச போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் வழித்துணையுடன் போராளிகள் கடல்வழியாக பயணங்களை கிழக்கிற்கு

# மாவிலாறு மகிந்தவும்
# முள்ளிவாய்க்கால் பிரபாகரனும்
# நடந்தது என்ன?



சுழியோடி

03




மேற்கொண்டனர். இதற்கிடையில் தமிழீழ விடுதலைப்புலிகள் புலனாய்வு பொறுப்பாளர் ச.பொட்டு அவர்களும் வன்னியில் இருந்து காடு மற்றும் கடல் வழிகளுடாக இரகசிய பயணம் ஒன்றை திருமலைக்கு மேற்கொண்டார். அங்கு சொர்ணம் அவர்களுடன் இணைந்து அங்குள்ள கள நிலைமைகளை ஆராய்கின்றார். அங்கு மக்களை சந்தித்து உரையாடிவிட்டு வன்னி திரும்புகின்றார். அன்று இது ஒரு இரகசிய பயணமாகவே இருந்தது. இதன் பின்னர் விடுதலைப்புலிகளின் நீண்டகால திட்டமிடலின் அடிப்படையில் வெருகல் பிரதேசத்தில் கல்லடி என்னும் கிராமத்தில் வானொலி ஒலிபரப்பு சேவை என்ற பெயரில் தொலைத்தொடர்பு வான்படை கடல்வழி அவதானிப்பு கருவிகளை இணைப்பதற்காக இரண்டு கோபுரங்கள் (ரவர்கள்) அமைக்கப்படுகின்றன. கடற்கரையை அண்மித்ததாக மலையில் 120 அடி உயரம், 200 அடி உயரம் உடையதுமான இரண்டு கோபுரங்கள் அமைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இதனை அறிந்த சிறிலங்கா படைப்புலனாய்வாளர்கள் இது குறித்து ஆராய்கின்றார்கள். பின்பு சிறிலங்கா வானொலியொன்றில் இது செய்தியாக வெளியிடப்படுகின்றது. திருமலையில் விடுதலைப்புலிகளின் விமானத்தளம் அமைப்பதுக்கான கண்காணிப்பு கோபுரம் வெருகல் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவருகின்றது என்ற செய்தி அங்கு பரபரப்பை ஏற்படுத்துகின்றது. இந்த கோபுரம் அருகிலுள்ள சிங்கள கிராமங்களுக்கும் தெரிவதால் அங்குள்ள சிங்கள மக்களுக்கும் ஊர்காவல் படையினரின் மனங்களிலும் சிறு அச்சம் ஏற்படுகின்றது.

இவ்வாறு இருக்கையில் 2004ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு தொகுதி ஆயுத தளபாடங்கள் கடல் வழியாக இறக்கப்படுகின்றன. கடல்புலிகளால் ஆயுதங்கள் பாதுகாப்பாக இறக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட தளபதி பானுவிடம் ஒப்படைக்கப்படுகின்றன. வன்னியிலிருந்த ஆயுத பயிற்சி ஆசிரியர்கள் நிர்வாக திறன்மிக்க போராளிகள் தாக்குதல் வியூகங்களை வகுக்கும் தளபதிகள் இரகசியமாக திருகோணமலை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டு பயிற்சி வகுப்புக்கள் நிர்வாகம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். அங்குள்ள போராளிகளுக்கு கற்பிக்கின்றார்கள் மரபுவழி படையணிகள் கட்டி வளர்க்கப்படுகின்றன.

குறிப்பாக ஜெயந்தன் படையணி அன்பரசி படையணி மோட்டார் படையணி என்பன சிறப்புற கட்டியமைக்கப்படுகின்றன. இவற்றுக்கு மத்தியில் சிறிலங்கா படையின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து கொண்டு செயற்படும் துரோகிகள் களையப்பட வேண்டிய அவசியம் எழுகின்றது. விடுதலைக்கு ஆதரவாக செயற்படுபவர்களை படைப் புலனாய்வாளர்களும் படுகொலை செய்துகொண்டு இருந்தமையால் இதனை தடுத்து நிறுத்த அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு இறுக்கமான நிலை ஏற்படுகின்றது. இதனால் இதற்காக விசேட அணியொன்று பிஸ்டல் குரூப் என்ற பெயரில் இரகசியமாக உருவாக்கப்படுகின்றது. தமிழீழ விடுதலைக்காக துரோகத்தனங்களில் ஈடுபட்ட துரோகிகள் படைப்புலனாய்வாளர்கள் இக்குழுவின் இலக்கிற்குள் அகப்பட்டுக்கொள்கின்றார்கள். இரு பகுதிக்கும் இடையே ஒரு மறைமுக மோதலாக இது இடம்பெற்று கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் தான் 2004ஆம் ஆண்டு 12ஆம் மாதம் 26ஆம் நாள் சுனாமி தமிழீழ கரையெங்கும் தாக்குகின்றது. திருகோணமலையில் விடுதலைப்பகுதியில் நிர்வாக பகுதியான சம்பூர தொடக்கம் வாகரை மாங்கேணி கடற்கரை வரை தாக்கிய சுனாமியால் ஆயிரகணக்கான மக்கள் காவுகொள்ளப்படுகின்றனர். மக்களின் உடைமைகள் அளிக்கப்படுகின்றன இதன் போதும் வாகரையில் விடுதலைப்புலிகளின் சில தளங்கள் பாதிப்படைகின்றன. குறிப்பாக அங்கிருந்த மோட்டார் தளங்களில் கடல் தாக்கம் ஏற்படுகின்றது. இந்த பாதிப்பிற்குள் தளபதி பால்ராஜ் உள்ளாகின்றார்.

இதனை தொடர்ந்து திருமலையில் மக்களை மீள்கட்டுமானம் செய்யும் பணிகளில் விடுதலைப்புலிகளின் நிர்வாக கட்டமைப்புகள் செயற்படுகின்றன. கொல்லப்பட்ட மக்களின் உடலங்களை எடுத்து அடக்கம் செய்யும் மக்களுக்கான இருப்பிட வசதிகள் உணவு வசதிகள் என்பனவற்றை ஏற்படுத்திக்கொள்ளும் பணிகளில் ஈடுபடுகின்றார்கள். இதே வேளை இந்த சுனாமியால் படையினரின் வளங்களும் பாதிக்கப்பட்டு அவர்களின் போர் முனைப்புக்கள் தாமதமடைகின்றன. போர் ஒன்றை சிறிலங்கா இராணுவம் ஆரம்பிக்க முடியாத நிலையை இந்த சுனாமி ஏற்படுத்தியது.



தொடரும்...



# தை பிறந்தால் வழி பிறக்கும்

தை பிறந்தால் வழி பிறக்கும், இது வெறும் பழமொழி அல்ல. பல தமிழரின் கண்ணீரைப் போக்கும் அறுவடைக் காலம். தை மாதம் முதல் நாள் உத்தராயணம். தமிழர்களின் வாழ்வியலில் விழாக்களுக்கென்று தனியான சிறப்பிடம் உள்ளது. பண்டிகைகள் என்றாலே மகிழ்ச்சி, வேடிக்கைகள், கொண்டாட்டங்கள் என்று கூறிக்கொண்டே போகலாம். பழந்தமிழரின் காலம் தொட்டே திருவிழாவானது நிறைய மாதங்களில் இருந்து வந்துள்ளன. அந்த வரிசையில் சிறப்பானதொரு திருவிழா மாதமாக இருப்பது தை மாதம் ஆகும். தொன்றுதொட்டு தை பிறந்தால் வழிப்பிறக்கும் என்ற பழமொழி மற்றும் முதுமொழியானது நமது வாழ்வில் கலந்தே உள்ளது. அப்படி என்ன தான் சிறப்பு உள்ளது? என்பதை அறியாமலே கூறுவோர் பலருண்டு.

**உத்தராயண புண்ணிய காலம்**

உத்தராயணம் புண்ணிய காலம் உத்தராயணம் என்பது வடமொழிச் சொல்லாகும். வடமொழியில் உத்தர் என்றால் வடக்கு என்றும், அயனம் என்றால் வழி என்றும் பொருள்.

கண்ணிற்கு புலப்படும் ஒரே இறை சக்தியாக விளங்குபவர் சூரியன் மட்டுமே. அப்படிப்பட்ட சூரியன் தனது பயணத்தை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி பயணிக்கும் காலமே உத்தராயணம் ஆகும்.

தை மாதத்தில் சூரியன் ராசி மண்டலத்தில் மகர ராசியில் நுழைந்து 29 நாட்கள், 27 நிமிடங்கள், 16 வினாடிகள் வரை பயணிப்பார். தை மாதம் முதல் ஆனி மாதம் வரையில் ஆறு மாதத்திற்கு உத்தராயணம் நீடிக்கும். இக்காலமானது ஞானத்தை வழங்கும் காலமாக கருதப்படுகிறது. இதுவே தேவர்களின் காலைப் பொழுது என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளது.

**புராணங்களில் தை மாதம்**

வேத, இதிகாச, புராணங்களில் இந்த தை மாதமானது சிறப்பானதொரு மாதமாக சொல்லப்பட்டுள்ளது.

தை மாதம் பீஷ்மர் அர்ஜீனன்மகாபாரதப் போரில்பீஷ்மர் அர்சுனனின் அம்புகளால் வீழ்ந்தும் உயிர் துறக்கவில்லை. அம்பு படுக்கையில் கிடந்தார். தான் விரும்பிய தருவாயில் மரணம் வேண்டும் என்ற வரத்தைப் பெற்ற அவர் "தை முதல் நாள்" அதாவது உத்தராயணம் துவங்கும் வரை காத்திருந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது.

உத்தராயணத்தில் தான் ஞானத்தின் வழி பிறக்கும். எனவே அப்பொழுது இறப்பவர்களுக்கு மறுப்பிறப்பு இருக்காது. இந்த யுகத்திலும் இராமலிங்க வள்ளலார் போன்ற எண்ணற்ற சித்த புருஷர்கள் உத்தராயண காலத்தில் முக்தி அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எனவே புராண காலத்தில் இருந்தே தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது நம்படுகிறது என்று அறிகிறோம்.

**அறுவடைக் காலம்**

தை முதல் நாள் நெல் அறுவடைக் காலம் ஆடி மாதம் துவங்கி ஆறு மாதத்திற்கு நெற்பயிர் வளர ஆரம்பித்து தை மாதத்தில் அறுவடைக்குத் தயாராகும். இதில் ஆறு மாதம் விவசாயிகள் தான்பட்ட கடன், துன்பம், கவலைகள் எல்லாம் தீர்ந்து அறுவடை செய்து பணம் ஈட்டி துன்பங்கள் எல்லாம் தீர வழி பிறக்கும்.

இதனால், தை மாதத்தை தமிழர்கள் உற்சாகமாக வரவேற்பார்கள். இதனைத்தான் பொங்கல் விழாவாக கொண்டாடுகிறோம்.

பொதுவாக கார்த்திகை பௌர்ணமி முடிந்து மார்கழி முடியும் வரை குடமுழுக்கு, திருமணம், புதுமனைப் புகுதல் போன்ற நிகழ்ச்சிகள் நிலுவையில் இருக்கும்.

தை மாதம் துவங்கும் போது இவை அனைத்தும் இனிதே துவங்கும். சுபகாரியங்கள் துவங்க வழி பிறக்கும் என்பதால் தை பிறந்தால் வழி பிறக்கும் என்பர்.

**முன்னோர்கள் விடைபெறும் காலம்**

தட்சிணாயன காலத்தில் பூமிக்கு வரும் முன்னோர்கள், நான்கு மாதங்கள் இங்கு இருந்து தங்களின் சந்ததியினரை ஆசிர்வதிப்பார்கள்.

மீண்டும் சூரியனின் துணைக் கொண்டு பித்ரு லோகம் செல்ல பாதை பெற்று விடைப்பெறுகின்றனர் என்று நம்பப்படுகிறது. எனவே தை பிறந்தால் வழி பிறக்கும் என்பர்.

**பஞ்சம் தீர்க்கும் தை மாதம்**

விளைச்சல் முடிந்து அறுவடை நடந்து பயிர்கள் அனைத்தும் வீடு சேரும் மாதமே தை ஆகும். தை முதல் நாள் சூரியனுக்கு படைப்பார்கள்.

இக்காலகட்டத்தில் தான் தானியப் பயிர்களில் முக்கியமாக நம் தமிழர்களின் அன்றாட உணவான நெல்லானது அதிக அளவிலும், சற்று விலை குறைவாகவும் கிடைக்கிறது.

பெரும்பாலும் ஒரு வருடத்திற்கு தேவையான நெல்லை மக்கள் வாங்கி பத்திரப்படுத்தி கொள்வர். வீட்டில் உணவிற்குப் பஞ்சமின்றி மகிழ்வுடன் இருக்க வழி பிறக்கும் காலம்.

இவ்வாறு ஒரு பழமொழிக்கு எண்ணற்ற விளக்கங்கள் தந்துள்ள நம் முன்னோர்கள் முட்டாள்கள் அல்ல. உழைப்பினால் உலகையே ஆண்டவர்கள்.

இன்று நாகரிகம் என்ற பெயரில் பல்வேறு விழாக்களையும், கொண்டாட்டங்களையும் இழந்து வருகிறோம்.

இந்த ஆண்டு தை பிறப்பிலிருந்து அனைவரும் தங்களின் பாரம்பரியத்தை மறக்காமல் சொந்த பந்தங்களுடன் சேர்ந்து தமிழர் திருநாளான தைத்திருநாளை வரவேற்று கொண்டாடுவோம்.

**தை பிறந்தால் வழி**
**பிறக்கும்**
**தடைகள் தகரும்**
**தலைகள் நிமிரும்**
**நிலைகள் உயரும்**
**கனவுகள் நிஜமாகும்**
**அவலங்கள் அகலும் – என்ற**
**நம்பிக்கையில் பத்திரிகை**
**வாசகர்கள் அனைவருக்கும்**
**இதயம் கனிந்த**
**தமிழர் திருநாளம்**
**தைப்பொங்கல்**
**வாழ்த்துக்கள் தெரிவிப்பதில்**
**மகிழ்ச்சியடைகின்றோம்.**

# மகளிர் பக்கம்



## இயற்கை அழகு குறிப்புகள்....!

முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாற கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

தலை முடி செழித்து வளர வெந்தயத்தை ஊறவைத்து நன்கு அரைத்து தலையில் பேக் போல போட்டு ஊறிய பிறகு தலைக்கு குளிக்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் பலன் தரும்.

சருமம் நிறம் அதிகரிக்க ஆப்பிள் விழுது இரண்டு டீஸ்பூன், பால்பவுடர் அரை டீஸ்பூன், பார்லி பவுடர் அரை டீஸ்பூன் மூன்றையும் கலந்து முகத்தில் போட்டு அரை மணி நேரம் கழித்து கழுவினால் முகம் மின்னல் போல மின்னும்.

கண்கள் பிரகாசமாக இருக்க இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவுதல் வேண்டும். கருவளையம் நீங்க ஆரஞ்சு பழத்தின் சக்கையை கண்கள் மீது அரைமணி நேரம் வைத்திருந்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினால் கருவளையம் காணாமல் போய்விடும்.

மருதாணி நன்கு சிவக்க மருதாணி போடும் முன் கையில் எலுமிச்சை பழ சாறு தடவி உலர விட்டு பிறகு போட்டால் மருதாணி நன்கு சிவக்கும்.



## வேர்க்கடலை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்!

நிலத்திற்கு அடியில் விளையும் தாவர வகையைச் சேர்ந்தது நிலக்கடலை. இந்த வேர்க்கடலையில் இருந்து புரதச் சத்து கிடைக்கிறது.

பொதுவாக மாமிசங்கள், முட்டை, காய்கறிகளைவிட இந்த வேர்க்கடலையில் அதிக புரதச் சத்து கிடைப்பதாக உணவு நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த வேர்க்கடலை மணலில் வறுத்தும், நீரில் வேகவைத்தும், உணவில் பரிமாறியும் மக்கள் சாப்பிட்டு வரும் நிலையில், இந்த வேர்க்கடலையை நீரில் சில மணி நேரம் ஊறவைத்து சாப்பிடும் போது உடலுக்கு நன்மை அதிகம் எனவும் கூறப்படுகிறது.

வேர்க்கடலையில், புரதச்சத்துகள் மட்டுமின்றி, பொட்டாசியம், பாஸ்பரஸ், விட்டமின் பி, மெக்னீசியம் ஆகிய சத்துகளும் உள்ளதாகவும், முக்கிய ஆரோக்கிய தீனியாகவும் இது உள்ளாது.

## தினமும் கீரையை உணவில் சேர்த்து கொள்வதால் கிடைக்கும் நன்மைகள்

கீரையில் பல நன்மைகள் மறைந்துள்ளது. ஆனால் சிலர் கீரையை உணவாக சாப்பிடுவது மாத்திரையை விழுங்குவது போல முகத்தை சுழித்து தான் சாப்பிட்டிருப்போம். கீரை சாப்பிடுவதால் கண் பார்வைக்கு துணைபுரிவதுடன், விழித்திரையின் மாகுலர் சிதைவு அபாயத்தையும் குறைக்கின்றன.

உண்மையில் கீரை சாப்பிடுவதால் நமது உடலுக்கு என்ன கிடைக்கிறது என்பதை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். கீரை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து பார்க்கலாம்.


நன்மைகள்:-

உடலுக்கு தேவையான அனைத்து சத்துக்களும் கீரைகளில் நிரம்பி இருக்கின்றன. நம் உடலுக்கு தேவையான இரும்பு சத்து, மக்னீசியம் உள்ளிட்ட தாது சத்துக்கள், வைட்டமின்கள் பி1, இ, கே ஆகியவை கிடைக்கின்றன. கீரைகளில் உள்ள கரோட்டினாய்கள் வைட்டமின் ஏவாக மாற்றப்பட்டு உடலின் வளர்ச்சி மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

உடல் இயக்கத்துக்கு நார்ச்சத்து மிக மிக அத்தியாவசியமாகும். அந்த நார்ச்சத்து கீரைகளில் அதிகளவு கிடைக்கின்றன. செரிமானக் கோளாறுகள் ஏற்படுவதை தடுக்கின்றன. சரியான நேரத்தில் பசியை தூண்டுவதற்கு கீரைகளில் உள்ள நார்ச்சத்து உதவுகிறது.

உணவு பழக்க வழக்க மாறுபாட்டால் இதய பிரச்சனைகள் வாழ்வியல் நோயாக மாறியுள்ளது. சரியான உணவுகளை எடுத்துக்கொள்ளாமல் வைட்டமின் மற்றும் நார்ச்சத்து இல்லாத உணவுகளை சுவைக்காக மட்டும் எடுத்துக்கொள்வதால் இதயப் பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது.

கொழுப்பு உணவுகளை எடுத்துக்கொள்ளும் போது நமது உடலில் ஆக்ஸிஜனேற்ற அழுத்தம் அதிகரிக்கிறது. இவை இருதய நோய்க்கு காரணமாக அமைவதுடன் டி.என்.ஏகளையும் சேதப்படுத்துகின்றன. இதனால் உடலில் புற்றுநோய் உருவாக அதிகப்படியான வாய்ப்பு உள்ளது. கீரையில் இருக்கும் பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் வைரஸ் எதிர்ப்பு பண்புகளும் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவி மிகப்பெரிய நோய் அபாயத்தில் இருந்து காக்க உதவுகின்றன.



## தித்திக்கும் கரும்புச்சாறு பொங்கல்!

பொங்கல் தினத்தை முன்னிட்டு வீட்டிலே எளியமுறையில் செய்யக்கூடிய கரும்புச்சாறு பொங்கல் எப்படி செய்வது என்பதை பார்ப்போம்.



தேவையான பொருட்கள்:

பச்சரிசி - 1/4 கப்
பாசிப்பருப்பு - 1/8 கப்
கரும்புச்சாறு - 1 1/2 கப்
கற்கண்டு - 1/8 கப்
நெய் - 2 டேபிள் ஸ்பூன்

செய்முறை

முதலில் கரும்பை எடுத்து, அதன் வெளித்தோலை நீக்கிவிட்டு, அவற்றை சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ள வேண்டும். பின் அதை மிக்சர் ஜாரில் போட்டு, சிறிது நீரை ஊற்றி நன்கு அரைத்து, வடிகட்டி சாறு எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு அரிசியை நீரில் கழுவி தனியாக வைத்துக் கொண்டு பின்னர் குக்கரை அடுப்பில் வைத்து, அதில் பாசிப்பருப்பைப் போட்டு பொன்னிறமாக வறுத்து அதில் அரிசியைப் போட்டு, கரும்பு சாற்றினை ஊற்றி கலந்து, குக்கரை மூடி குறைவான தீயில் வைத்து 4 விசில் விட்டு இறக்கிக் கொள்ள வேண்டும்.

விசில் போனதும் குக்கரைத் திறந்து, அதில் கற்கண்டை சேர்த்து நன்கு, கற்கண்டை கரைய விட வேண்டும். கற்கண்டுகள் நன்கு கரைந்ததும், கரண்டியால் நன்கு பொங்கலை மசித்து விட வேண்டும்.

அடுத்து அதில் ஏலக்காய் பொடியைத் தூவி கிளற வேண்டும். மற்றொரு அடுப்பில் சிறு வாணலியை வைத்து, அதில் நெய் ஊற்றி சூடானதும், முந்திரியைப் போட்டு வறுத்து, குக்கரில் உள்ள பொங்கலுடன் கிளறினால், சுவையான கரும்புச்சாறு பொங்கல் தயார்.

## எலும்புகளை வலுவாக்கும் தயிர்

பாலில் இருந்து உருவாகும் தயிர் எலும்புகளை வலுவாக்கும் என்றும் உடல் எடையை சீராக வைத்திருக்க உதவும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாலில் இருந்து தயாரிக்கப்படும் தயிரில் கல்சியம் அதிகம் இருப்பதால் அது எலும்புகளை வலுவாக்கும். தயிரில் உள்ள கல்சியம் எலும்பின் அடர்த்தியை சமப்படுத்துவதோடு பலப்படுத்தவும் செய்யும்.

தயிரில் குறைந்த அளவு கொழுப்புகள் இருப்பதால் உடல் எடையை சீராக பராமரிக்க உதவும். குளிர்காலத்தில் தயிர் சாப்பிட்டால் சளி இருமல் வரும் என்று கூறப்பட்டாலும் தயிர் கோடை காலத்திலும் குளிர் காலத்திலும் சாப்பிடலாம்.

குறிப்பாக குளிர் காலத்தில் சரும பிரச்சனைகள் வரும் போது தயிர் சாப்பிட்டால் இயற்கையாகவே அதில் உள்ள ஈரப்பதம் சருமத்தை உலர்வடைய செய்யாமல் காக்கும்.

முகப்பரு பிரச்சனை உள்ளவர்களுக்கு தயிர் ஒரு சிறந்த நிவாரணியாக இருக்கும். மாதுளை அல்லது ஸ்ட்ராபெர்ரி பழத்துடன் தயிர் கலந்து சாப்பிடுவதால் உடல் புத்துணர்ச்சி கிடைக்கும்.

குழந்தைகளின் உணவில் கண்டிப்பாக தயிர் பயன்படுத்த வேண்டும். காய்கறிகளுடன் தயிர் சேர்த்து சாலட் தயாரித்து கொடுப்பது சிறப்பானது என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏதோ ஓர் பிரிவு நம்மை கலங்கடிக்கையிலே வலிகளின் நிஜத்தை
உணர்கிறோம் பிரிந்தும்கூட நினைவினில் நிழலாய் யாராலும்
களவாட முடியாத பொக்கிஷமாய் நாம் பழகிய நினைவுகள்!!!

# நல்லிணக்கப் பொறிமுறை தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்குமா?

**கடந்தவார தொடர்ச்சி...**

பொலிஸ் போன்ற நிரந்தர விசாரணை அமைப்புக்கள் தொடக்கம் அவ்வப்பொழுது தேவைக்கென அமைக்கப்படும் ஆணைக்குழுக்கள் வரை இவை அமைந்திருக்கின்றன. தமது இழப்பு குறித்தும் பதில்கள், நீதிமற்றும்ஏனைய வடிவங்களிலான நிவாரணங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் குறித்தும் பேசிய எண்ணற்ற குடும்ப உறுப்பினர்களின் கடும் துயரம், விரக்தி மற்றும் வேதனை என்பன எம்மை பாதிக்காமல் இருக்க முடியாது. 1989 -1990 காலப் பிரிவில் எம்பிலிபிட்டியவில் காணாமற் போன மாணவர்களின் குடும்பங்களைப் போன்ற பாதிக்கப்பட்ட ஒரு சிலர் எமக்குக் கிடைக்கும் உள்நாட்டு நிவாரண வழிமுறைகளை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்தச் சம்பவம் ஒரு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன், சம்பவத்தை நிகழ்த்திய முதன்மையான நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் இடம்பெற்றிருந்தன. ஆனால், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதனை இந்தக் குடும்பங்களினால் இன்னமும் கண்டறிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுடைய உடல் எச்சங்கள் எங்கிருக்கின்றன என்பதனை அடையாளம் கண்டுகொள்வதும் இதில் அடங்குகின்றது. எனவே, அரசு ஏற்கனவே பெருந்தொகையான தகவல்களையும், ஆவணங்களையும் வைத்திருக்கும் அத்தகைய ஒரு சம்பவம் தொடர்பாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ன செய்ய முடியும்.

வடக்கிலிருந்து முன்வைக்கப்பட்ட ஒரு சமர்ப்பணம் குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பங்கள் "எத்தகைய பிரயோசனமும் இல்லாமல் தமது கதைகளை மீண்டும்மீண்டும்கூறவேண்டியிருப்பதால்தாம் அனுபவித்த கடும் மன அதிர்ச்சியை அவர்கள் மீண்டும் அனுபவிக்க வேண்டியுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளது. மீண்டும் கடும் மன அதிர்ச்சிக்கு உள்ளாக்கப்படுதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணர்வு ரீதியான துன்பத்தையும், வேதனையையும் ஏற்படுத்துதல் என்பவற்றுடன் கூடிய ஆபத்துக்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மத்தியில் அரசுக்கு எதிரான விரக்தி மற்றும் ஆத்திரம் என்பன தீவிரமடையக் கூடிய அச்சுறுத்தலும் காணப்படுகின்றது. தாம் அனுபவித்திருக்கும் அத்துமீறல்களுக்கு பொறுக்கூற வேண்டும் என்ற நிலை அவர்கள் மீது சுமத்தப்படுவதே இதற்கான காரணமாகும்.

விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் அவ்வவ்போதைய தேவைகளுக்கென அமைக்கப்படும் பொறிமுறைகள் என்பவற்றுடன் சம்பந்தப்படும் அனுபவங்கள், உண்மையை தேடும் பொறிமுறை தொடர்பான ஏமாற்றங்களையும், சந்தேகங்களையும் உருவாக்கியுள்ளன. பல்வேறு அரச முகவரகங்களிடம் தாம் பல தடவைகள் சாட்சியளித்திருப்பதாகவும் உண்மையை கண்டறிந்து கொள்வதற்கு எத்தகைய தொடர் நடவடிக்கையையும்மேற்கொள்ளப்படவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஒரு சில சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகள் குற்றச் செயல்களை இழைத்த நபர்களின் அடையாளத்தை பதிவு செய்வதற்கு மறுத்திருப்பதாக அல்லது ஒரு முறைப்பாட்டை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்திருப்பதாக அல்லது பாதிக்கப்பட்டவர்கள் துன்புறுத்தல் அல்லது பாலியல் இலஞ்சம் என்பவற்றுக்கு கூட ஆளாக்கப்பட்டிருப்பதாக ஒரு சிலர் தெரிவித்திருக்கிறார்கள்.

பல சமர்ப்பணங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோர் துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல் குறித்த அச்சமில்லாமல் சுதந்திரமான விதத்தில் பேசக்கூடிய சாதகமான ஒரு சூழலின் முக்கியத்துவம் குறித்து கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. சில சமர்ப்பணங்கள் துன்புறுத்தல் சம்பவங்களை சுட்டிக்காட்டியிருந்தன. அதாவது, மனித உரிமைமீறல்கள்தொடர்பாகமுறைப்பாடுகளை செய்திருந்தவர்கள், தமக்கு எதிராக குற்றச் செயல்களை இழைத்த நபர்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதற்குப் பதிலாக, தம்மைப் பற்றிய விசாரணைகள் நடத்தப்பட்டு



வரும் நிலையை உணர்ந்திருந்தார்கள். இது உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தற்போதைய சூழ்நிலையில் நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும் ஒரு சவாலாக இருக்கும். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் ஆகியோர் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படும்சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டிருக்கும் நிலையில், அவர்களுடைய பாதுகாப்பு உண்மையில் கரிசனைக்குரியவையாக இருந்து வரும். அறகலயவுடன் சம்பந்தப்பட்டவர்கள் தவிர, குறிப்பாக வடக்கு கிழக்கைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் ஆகிய தரப்புக்கள் இத்தகைய சம்பவங்களை எதிர்கொண்டு வருகின்றன.

கலந்தாலோசனை செயலணி அறிக்கை குறிப்பிட்டிருப்பதைப் போல "இந்த முடிவுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை மற்றும் தொடர் வழிமுறைகள் மேற்கொள்ளப்படாமை என்பவற்றின் பின்னணியில், விசாரணை ஆணைக்குழுக்களின் பெயர், தண்டனை விலக்குரிமை என்பதற்கு இணையானதாக இருந்து வருகின்றது." போரின் முடிவை அடுத்து சரணடைந்தவர்களின் குடும்பங்களைப் போலவே, தமது அவலநிலை குறித்து கிஞ்சித்தும் பொருட்படுத்தாத ஓர் அரசை பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அது மட்டுமன்றி, அந்த மக்கள் நேரடியாக எதிர்கொண்டு அனுபவித்த "உண்மைகளை" மறுப்பதற்கும், உதாசீனம் செய்வதற்கும், அழித்து விடுவதற்கும் கூட அரசு முயன்று வருகின்றது. இந்த நிலையில், இந்தக் கலந்தாலோசனைகள் கூட சந்தேகத்துடனும், அரசின் மெத்தனத்தின் ஒரு பாகமாகவும் நோக்கப்பட்டு வந்தன. இந்த முறைமைசார்ந்த தோல்வியின் வரலாற்று மரபினையே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அரசு இந்த மக்களின் வேதனை மற்றும் மன்றாட்டங்கள் என்பவற்றை செவிமடுத்துக் கேட்கும் முதல் தடவை இது என்பதைப் போல பாவனை செய்து, பாதிக்கப்பட்டவர்களை அழைத்து, தமது கருத்துக்களை கூறுமாறு கேட்டுக்கொள்ளும் சுதந்திரம் தனக்கிருக்கிறது என அந்த ஆணைக்குழு கருத முடியாது.

**எதிர்ப்பு மற்றும் மீள் நோக்கம்**

உண்மையை கண்டறியும் பொறிமுறை ஒன்றை ஸ்தாபிப்பது தொடர்பாக கடும் எதிர்ப்பைவெளியிட்டிருந்த பெருந்தொகையான சமர்ப்பணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதற்கான நியாயப்படுத்தல் பல்வேறு வழிகளில் முன்வைக்கப்பட்டிருந்தன. மேலே எடுத்துக் காட்டப்பட்டதைப் போல, அத்தகைய ஒரு ஆணைக்குழு மெத்தனம் மற்றும் தண்டனை விலக்குரிமை என்பவற்றுக்கான ஒரு கருவியாக இருக்க முடியும் என்ற அச்சம் ஒரு சிலருக்கு மத்தியில் நிலவி வருகின்றது அவ்வாறான ஒரு ஆணைக்குழு தேசிய பாதுகாப்பை உதாசீனம் செய்து, வளர்ச்சியை சீர்குலைத்து, தற்பொழுது நிலவி வரும் இன உறவுகளை மேலும் மோசமாக்குவதுடன், பொது மக்களின் பணத்தை விரயம் செய்யும் ஒரு செயற்பாடாகவும் இருந்து வர முடியும் என ஏனைய சமர்ப்பணங்கள் எடுத்து விளக்கியுள்ளன. வட மேல் மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணம் என்பவற்றிலிருந்து முன்வைக்கப்பட்ட ஒரு சில சமர்ப்பணங்கள் இந்தப் பொறிமுறை நீதியை முன்னெடுக்கும் முயற்சிகளுடன் பிணைக்கப்பட்டிருக்கும் என்ற விதத்தில் அச்சத்தை தெரிவித்துள்ளன. நீதிக்கான போராட்டம் தொடர்பாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எடுத்து வரக்கூடிய தாக்கங்கள் குறித்து அத்துமீறல்கள் தொடர்பாக நீதியை கோரி நிற்பவர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர். சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான சான்றுகள் எவ்வாறு கையாளப்படப் போகின்றன மற்றும் அவை நீதிப் பொறிமுறைக்குள் அனுப்பி வைக்கப்படுமா? என்ற விதத்தில் ஒரு சில சமர்ப்பணங்கள் கேள்விகளை எழுப்பியுள்ளன.

கலந்தாலோசனைகள் இடம்பெற்ற காலப் பிரிவின் மத்தியிலும் கூட பாதிக்கப்பட்டவர்கள் தாம் அனுபவித்த துன்பங்கள் தொடர்பாக பெருமளவுக்கு சான்றுகளை முன்வைப்பார்கள் என்ற விதத்தில் திட்டவட்டமான பரிந்துரைகளை முன்வைக்கமாட்டார்கள் என்ற விதத்திலும் ஓர் எதிர்பார்ப்பு மனித உரிமைகள் குழுக்களுக்கு நிலவியது. அதற்குப் பதிலாக, பாதிக்கப்பட்டவர்கள் தாம் அனுபவிக்க நேரிட்ட முதன்மையான அத்துமீறல்களை எடுத்து விளக்குவதுடன் நின்று விடாது, நிவாரணம் கோரும் செயன்முறையின் போது அரசுடனான தமது அனுபவங்கள் குறித்த அடிப்படையில் யோசனைகளையும் முன்வைத்திருந்தார்கள். உதாரணமாக, ஒரு சில பாதிக்கப்பட்ட பெண்கள், பெண் அரச உத்தியோகத்தர்களுக்கான ஒரு கோட்டா இருந்து வர வேண்டும் என்ற விடயத்தையும், தாம் எதிர்கொண்ட பல்வேறு வடிவங்களிலான பாலியல் துன்புறுத்தல்களை தடுப்பதற்கென திட்டவட்டமான பாலியல் துன்புறுத்தல் கொள்கை ஒன்று இருக்க வேண்டும் என்ற விடயத்தையும் வலியுறுத்தியிருந்தார்கள்.

ஒரு சிலர் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை 30/1 இக்கு அப்பால் நிலைமாறு கால நீதி வழிமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென எதிர்கால கற்பனை தோற்றப்பாடுகளை குறிப்பிட்டிருந்தார்கள். கலந்தாலோசனை செயலணி 'நான்கு பொறிமுறைகளுக்கு அப்பால் நிலைமாறு நீதி' என்ற தலைப்பில் ஓர் அத்தியாயத்தை முன்வைக்க வேண்டுமென அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். வன்னி போன்ற இடங்களில் நடத்தப்பட்ட பொது மக்களின் சந்திப்புக்களின் போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான பாரம்பரிய மாதிரி நிராகரிக்கப்பட்டதுடன், பொது மக்கள் விசாரணை மன்றம் ஒன்றுக்கான வேண்டுகோள் முன்வைப்பட்டிருந்தது. அத்தகைய சமர்ப்பணங்களில் பகிரங்கமாக சாட்சியமளித்தல் போன்ற உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒரு சில அம்சங்களை கொண்டிருக்கும் பொறிமுறை குறித்து பாதிக்கப்பட்டவர்கள் உரையாடியிருக்கின்றார்கள். வழக்கு விசாரணை மற்றும் தண்டனை வழிமுறைகள் என்பவற்றையும் உள்ளடக்கிய நீதிக்கூறுகள் தொடர்பாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற விதத்தில் முன்வைக்கப்படும் வேண்டுகோள் கலந்தாலோசனை செயலணியில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்ததற்குமாறான விதத்தில், குறிப்பாக பெருமளவுக்கு நேரடியாக பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தவர்கள் உண்மை கண்டறியப்பட வேண்டும் என்ற விதத்தில் உயர் அளவிலான கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள். முக்கியமாக காணாமல் போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆகியோரின் குடும்பங்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கலந்தாலோசனைகளின் போது கணிசமான எண்ணிக்கையில் அவற்றில் பங்குபற்றியதுடன், தமது அன்புக்குரியர்களுக்கு என்ன நடந்துள்ளது என்பதனை தாம் தெரிந்து கொள்ள விரும்புவதாக கூறியுள்ளார்கள். ஒரு சிலரை பொறுத்தவரையில் உண்மையை அறிந்து கொள்ளும் உரிமை தமது முதன்மையானதும், அவசரமானதுமான கோரிக்கையாக இருந்தது. இந்தக் கேள்விக்கான பதில் தமக்குக் கிடைக்கும் வரையில் நட்டஈடு மற்றும் ஏனைய வடிவங்களிலான இழப்பீடுகள் என்ற எந்தக் கருத்தையும் தெரிவிப்பதற்கு அவர்கள் முன்வரவில்லை. அவ்விதம் வழங்கப்படும் இழப்பீடுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டால் உண்மை மற்றும் நீதி என்பவற்றை கண்டறிவதில் மக்கள் ஆர்வமற்றவர்களாக இருந்து வருகின்றார்கள் என அரசு அதற்கு வியாக்கியானம் வழங்க முடியும் என அவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பல்வேறு நோக்களை நிறைவேற்றி வைக்க முடியும் என்ற விடயம் தொடர்பாக கவனத்தை ஈர்க்கும் விதத்தில் ஒரு சில சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. உண்மையை நிலைநிறுத்துதல், மோதலுக்கான மூல காரணங்களை நிர்ணயித்தல், அத்துமீறல்களை நிகழ்த்தியிருப்பவர்களை அவற்றுக்குப் பொறுப்புக்கூற வைத்தல், வரலாறு குறித்த பன்முக கதையாடல்களை கட்டியெழுப்புதல், மீண்டும் அவ்விதம் நிகழாதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல், ஏனையவற்றுடன் அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன தொடர்பாக நிவாரணங்களை கோருவதற்கான இயலுமையை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குதல்.

பல்வேறுசமூகங்களையும்சேர்ந்த பிரதிநிதிகள் வரலாற்று ரீதியான மனக்குறைகள் மற்றும் திட்டவட்டமான அத்துமீறல்கள் என்பன குறித்துப் பேசினார்கள். உள்நாட்டுப் போரின் இறுதி மாதங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள், 1980 இன் பிற்பகுதிகளில் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சி, போர் இடம்பெற்ற காலப் பிரிவின் போது எல்லைக் கிராமங்கள், அகதிகள், ஊடகவியலாளர்கள், மாற்றுப் பாலீர்ப்பாளர் சமூகத்தினர் மற்றும் பெண்கள் குழுக்கள் போன்ற விடயங்களும் உண்மையை கண்டறியும் பொறிமுறையில் உள்ளடக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

**தொடரும்....**

**மிராக் ரஹீம்**

# விளையாட்டு

## ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக இரு சதங்கள் அடித்த பிரபல பேட்டர் விராட் கோலி

ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக இரு சதங்கள் அடித்த பிரபல பேட்டர் விராட் கோலி, ஒருநாள் தரவரிசையில் முன்னேற்றம் அடைந்துள்ளார்.

குவாஹாட்டியில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் 113 ஓட்டங்கள் எடுத்த விராட் கோலி, ஆட்ட நாயகனாகத் தேர்வானார். வருடக் கடைசியில் வங்கதேசத்துக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் சதமடித்தார். இதற்கடுத்து விளையாடிய ஒருநாள் ஆட்டத்திலும் இலங்கைக்கு எதிராகச் சதமடித்தார்.

இந்நிலையில் ஐசிசி வெளியிட்டுள்ள ஒருநாள் தரவரிசையில் இரு இடங்கள் முன்னேறி 6 ஆம் இடத்தைப் பிடித்துள்ளார் கோலி. ரோஹித் சர்மா 8 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஒருநாள் தரவரிசையில் பாகிஸ்தான் தலைவர் பாபர் ஆஸம் முதல் இடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளார். அடுத்த 4 இடங்களில் வான் டர் டுசென், இமாம் உல் ஹக், குயிண்டன் டி காக், வார்னர் ஆகியோர் உள்ளார்கள். இந்தியாவின் ஷ்ரேயஸ் ஐயர் 15 வது இடத்தில் உள்ளார்.



## நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக மிட்செல் சான்ட்னர்

சர்வதேச இருபது20 போட்டிகளுக்கான நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் பதிய தலைவராக மிட்செல் சான்ட்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் நடைபெறவுள்ள இருபது20 போட்டிகளுக்கான அணித்தலைவராக மிட்செல் சான்ட்னர் செயற்படுவார் என நியூஸிலாந்து கிரிக்கெட் அறிவித்துள்ளது.

இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள இத்தொடரில் நியூஸிலாந்தின் சிரேஷ்ட வீரர்களான கேன் வில்லியம்ஸன், டிம் சௌதீ ஆகியோர் விளையாட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

27 வயதான வேகப்பந்துவீச்சாளர் பென் லிஸ்டரும் நியூ ஸிலாந்து குழாமில் முதல் தடவையாக சேர்க்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஒருநாள் சர்வதேச சுற்றுப்போட்டியொன்றில் இந்தியா, நியூ ஸிலாந்து அணிகள் மோதவுள்ளன. அதன்பின் ஜனவரி 27 ஆம் திகதி முதல் 3 சர்வதேச இருபது20 போட்டிகளில் இவ்விரு அணிகளும் மோதவுள்ளன.

இருபது20 போட்டிகளுக்கான நியூ ஸிலாந்து குழாம் விபரம்:

விபரம்: மிட்செல் சான்ட்னர் (தலைவர்), பின் அலென், மைக்கல் பிராஸ்வெல், மார்க் சப்மன், டேன் கிளெவர், டெவோன் கொன்வே, ஜேக்கப் டபி, லொகி பேர்குசன், பென் லிஸ்டர், டெரில் மிட்செல், கிளென் பிலிப்ஸ், மைக்கல் ரிபோன், ஹென்றி ஷிப்லே, இஸ் சோதி, பிளெய்ர் டிக்னர்.




## மத்தேயுஸ் பெர்னாண்டஸீக்கு 77 லட்சம் யூரோ இழப்பீடு வழங்குமாறு பார்சிலோனா கழகத்துக்கு நீதிமன்றம் உத்தரவு

பிரேஸில் கால்பந்தாட்ட வீரர் மத்தேயுஸ் பெர்னாண்டஸீக்கு 77 லட்சம் யூரோ (சுமார் 304 கோடி இலங்கை ரூபா , சுமார்70 கோடி இந்திய ரூபா) இழப்பீடு வழங்குமாறு பார்சிலோனா கழகத்துக்கு ஸ்பானிய உத்தரவிட்டுள்ளது.

தன்னை முறையற்ற வகையில் கழகத்திலிருந்து நீக்கியமைக்கு எதிராக குற்றம் சுமத்தி, மத்தேயுஸ் பெர்னாண்டஸ் தொடுத்த வழக்கிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.



தற்போது 24 வயதான மத்தேயுஸ் பெர்னாண்டஸ், 17 மற்றும் 20 வயதுக்குட்பட்ட பிரேஸில் அணிகளின் சார்பில் சர்வதேச போட்டிகளில் விளையாடியவர்.

பிரேஸிலின் போட்டாபோகோ மற்றும் பல்மெய்ராஸ் கழகங்களின் சார்பிலும் விளையாடிய அவரை ஸ்பெய்னின் பார்சிலோனா கழகம் 2020 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்தது. 5 வருடகாலம் அக்கழகத்தில் விளையாடுவதற்கு மத்தேயுஸ் இணக்கம் தெரிவித்தார்.

2021 ஏப்ரலில், யுக்ரைனின் டைனமிக் கியீவ் கழகத்துக்கு எதிரான ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் போட்டியொன்றில் மாற்று வீரராக களறமிறங்கி இறுதி 17 நிமிடங்கள் மாத்திரம் அவர் விளையாடினார்.

பார்சிலோனா கழகத்தின் சார்பில் அவர் விளையாடிய ஒரேயொரு போட்டி இது. அச்சுற்றுப்போட்டியில் பார்சிலோனா சம்பியனாகியது.

2021 ஜூன் மாதம், மெத்தேயுஸ் பெர்னாண்டஸீடனான ஒப்பந்தத்தில் 4 வருடங்கள் எஞ்சியிருந்த நிலையில், அவரை பார்ஸிலோனா கழகம் ஒருதலைபட்சமாக நீக்கியது.

இதனால் பார்சிலோனா கழகத்துக்கு எதிராக மெத்தேயுஸ் வழக்குத் தொடுத்தார்.

இவ்வழக்கை விசாரித்த ஸ்பெய்னின் கட்டலோனியா பிராந்திய உச்சநீதிமன்றம் மத்தேயுஸ் பெர்னாண்டஸீக்கு 77 லட்சம் யூரோவை பார்சிலோனா கழகம் இழப்பீடாக வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை தனது புகழுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக மேலும் 50 லட்சம் யூரோ வழங்க வேண்டும் என மத்தேயுஸ் பெர்னாண்டஸ் விடுத்தகோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மேற்படி தீர்ப்புக்கு எதிராக பார்சிலோனா கழகம் மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டிகளிலிருந்து விலகும் நயோமி ஒசாகா

உலகின் முன்னாள் முதல் நிலை டென்னிஸ் வீராங்கனையான நயோமி ஒசாகா, தான் கர்ப்பிணியாக உள்ளதாக அறிவித்துள்ளார்.

அடுத்த வாரம் ஆரம்பமாகும் அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டிகளிலிருந்து தான் விலகுவாக நயோமி ஒசாகா ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தான் கர்ப்பிணியாக உள்ளதை அவர் தெரிவித்துள்ளார் 2024 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பகிரங்க போட்டிகளில் விளையாடுவதற்கு தான் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

25 வயதான ஜப்பானிய வீராங்கனையான நயோமி ஒசாகா 4 தடவைகள் கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் சம்பியன் பட்டங்களை வென்றவர்.

2018, 2020 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க பகிரங்க சம்பியன்ஷிப் போட்டிகளிலும் 2019, 2021 ஆம் ஆண்டுகளில் அவுஸ்திரேலிய பகிரங்கப் போட்டிகளிலும் அவர் சம்பியனானார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பாடகர் கோடேயை நயோமி ஒசாகா நீண்டகாலமாக காதலித்து வருகிறார்.



# உலக வலம்

## நீண்ட தூர விமான பயணிகளுக்கு முகக்கவசம் அவசியம்

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ள சூழலில் உலக நாடுகளின் நீண்ட தூர விமான பயணிகளுக்கு முகக்கவசம் அவசியம் என உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை செய்துள்ளது. அமெரிக்காவில், கடந்த 7 ஆம் திகதி வரையிலான அறிக்கையின்படி, 27.6 சதவீதம் மக்கள் கொரோனாவின் எக்ஸ்.பி.பி.1.5 என்ற உருமாறிய அதிதீவிர பரவல் தன்மை கொண்ட ஒமிக்ரோன் வைரசால் பாதிக்கப்பட்டு உள்ளனர் என அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் கொரோனாவின் இந்த ஒமிக்ரோன் வைரசின் துணை வகை தொற்றானது சமீப நாட்களாக விரைவாக பரவி வருகிறது. எனினும், இந்த வகை வைரசானது, சர்வதேச அளவில் தொற்றை ஏற்படுத்தி புதிய அலையை ஏற்படுத்த கூடிய சாத்திய கூறுகள் பற்றி தெளிவாக தெரியவில்லை. இந்த சூழலில், கொரோனா பரவல் அதிகமுள்ள பகுதிகளில் இருந்து வர கூடிய எந்தவொரு பயணியும் முகக்கவசம் அணிந்து வரவேண்டும் என்று பரிந்துரைக்க வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐரோப்பிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஐரோப்பிய நாடுகளுக்கான மூத்த அவசரகால அதிகாரி கேத்தரீன் ஸ்மால்வுட் கூறும்போது, விமானத்தில் புறப்படும் முன் நாடுகள் பரிசோதனை செய்து அனுப்ப வேண்டும். வேற்றுமையின்றி பயண கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நாடுகள் அமுல்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார். அதனால், அமெரிக்காவில் இருந்து வரும் பயணிகளுக்கு பரிசோதனை செய்ய வேண்டும் என்று எங்கள் அமைப்பு பரிந்துரைக்க வரவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். எனினும், 27 அரசாங்கங்களை சேர்ந்த ஐரோப்பிய யூனியனின் அதிகாரிகள் அடங்கிய குழுவானது, சீனாவில் இருந்து புறப்பட்டு வரும், சென்று சேரும் விமான பயணிகள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். சீனாவில் இருந்து வரும் பயணிகளிடம் பரவலான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என கடந்த வாரம் பரிந்துரைத்து இருந்தது. ஏனெனில், சீனா கொரோனா பற்றிய தகவலை குறைத்து காட்டுகிறது என உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட பல்வேறு நாட்டு விஞ்ஞானிகளும் நம்புகின்றனர். அமெரிக்காவில் பரவல் அதிகரித்துள்ள இந்த சூழலில், கொரோனா பரவல் அதிகமுள்ள பகுதிகளில் இருந்து வர கூடிய மற்றும் நீண்டதூர விமான பயணம் மேற்கொள்ளும் எந்தவொரு பயணியும் முகக்கவசம் அணிந்து வரவேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை செய்து உள்ளது.




## அவுஸ்திரேலியாவில் இந்துக் கோவில் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் திடீர் தாக்குதல்

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரிலுள்ள சுவாமி நாராயண் இந்துக் கோவில் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் திடீர் தாக்குதல் நடத்தியதுடன், இந்தியாவுக்கு எதிரான வாசகங்களையும் அதில் எழுதியுள்ளனர்.

இது பற்றி 'தி அவுஸ்திரேலியா டுடே' வெளியிட்டுள்ள செய்தியில் கூறியதாவது:

நாட்டின் மெல்போர்ன் நகரின் வடக்கு புறநகர் பகுதியிலுள்ள மில் பார்க் என்ற இடத்தில் பிரபல சுவாமி நாராயண் கோவிலின் சுவர் மீது இந்தியா ஒழிக என பொருள்படும் வகையிலான இந்துஸ்தான் முர்தாபாத் என வர்ணம் பூசியுள்ளனர். இந்துக்கள் மீது வெறுப்பை உமிழும் இந்தச் செயல்களால், பல்வேறு இந்தியர்கள் மற்றும் சீக்கிய தலைவர்களும் வருத்தமடைந்துள்ளனர்.

இதற்கு கேரள இந்து சமூகமும் கண்டனம் தெரிவித்துள்ளது. பிரதமர் மோடிக்கு எதிராகவும் கோவில் சுவர்களில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.



இந்த காலிஸ்தான் அமைப்பு, இந்திய பயங்கரவாதி எனக் கூறப்படும் ஜர்னைல் சிங் பிந்திரவாலே என்பவரின் புகழ் பாடியுள்ளது. காலிஸ்தானின் தனி மாநில கோரிக்கையின் தீவிர ஆதரவாளராக அறியப்பட்ட அவர், பின்னாளில் புளூஸ்டார் அதிரடி நடவடிக்கையின்போது, இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்டார். இந்து சமூகத்தினரின் சார்பில் எம்.பி.க்கள் மற்றும் பொலிசாரிடம் முறைப்படியான புகார் ஒன்று அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இருந்து இது போன்ற தாக்குதல்கள் நடந்து வருகின்றன. இந்தத் தாக்குதலுக்கு கோவிலின் நிர்வாகம் கடும் அதிர்ச்சியும், கண்டனமும் தெரிவித்துள்ளதுடன் அமைதி மற்றும் இறையாண்மைக்காக இறைவனை வேண்டிக் கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ளது.

## ஆப்கானிஸ்தானில் ஆண் வைத்தியர்களிடம் சிகிச்சை பெற பெண்களுக்கு தடை !

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021ஆம் ஆண்டு ஒகஸ்டு மாதம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய தலிபான்கள் பெண்கள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என உறுதியளித்தனர். ஆனால் அதற்கு நேர்மாறாக பெண்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் வகையில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர். கல்வி கற்க தடை, உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் கேளிக்கை பூங்காக்களுக்கு செல்ல தடை, ஆண்கள் துணையின்றி பயணிக்க தடை, வேலைக்கு செல்ல தடை என பல்வேறு கட்டுப்பாடுகளால் பெண்கள் நசுக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்து வந்தாலும் தலிபான்கள் அதனை பொருட்படுத்துவதாக இல்லை.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் பால்க் மாகாணத்தில் ஆண் வைத்தியர்களிடம் சிகிச்சை பெற பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொது விவகாரங்கள் மற்றும் தலிபான் புகார்களைக் கேட்கும் இயக்குநரகம் வெளியிட்ட உத்தரவில், பெண்கள் இனி ஆண் வைத்தியர்களை பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. பெண்கள் தங்களின் நோய்களுக்கு பெண் வைத்தியர்களிடம் மட்டுமே சிகிச்சை பெறவேண்டும். மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் இதனை கண்காணிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

## சுமார் 4வருடங்களில் முதல் தடவையாக சீனாவில் போயிங் 737 மெக்ஸ் பயணிகள் விமானம் பறந்தது

சுமார் 4 வருடங்களில் முதல் தடவையாக போயிங் 737 மெக்ஸ் ரக பணிகள் விமானமொன்று அன்று(13) வெள்ளிக்கிழமை சேவையில் ஈடுபட்டது. 2019 மார்ச் மாதத்துக்குப் பின்னர் சீனாவில் இந்த ரக பயணிகள் விமானம் பறந்தமை இதுவே முதல் தடவையாகும். போயிங் 737 மெக்ஸ் ரகத்தைச் சேர்ந்த விமானமொன்று 2018 ஒக்டோபரில் இந்தோனேஷியாவில் வீழ்ந்ததால் 189 பேர் உயிரிழந்தனர். 2019 மார்ச் மாதம் மற்றொரு போயிங் 737 மெக்ஸ் விமானம் எத்தியோப்பியாவில் வீழ்ந்ததால் 157 பேர் உயிரிழ்நதனர். அதையடுத்து உலகம் முழுவதும் மெக்ஸ் 737 ரக விமானங்கள் பறப்பதற்கு 2019 மார்ச் மாதம் தடைகள் விதிக்கப்பட்டன. சீனாவே முதலில் இத்தடையை விதித்தது.

பல மாதங்களின் பின்னர் இத்தடை நீக்கப்பட்டபோதிலும் சீனாவில் தொடர்ந்தும் அத்தடை நீடித்தது. இந்நிலையில், சைனா சதர்ன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் மெக்ஸ் 737 ரக விமானமொன்று சீனாவின் ஸெங்ஸோ விமானமொன்று பறக்க ஆரம்பித்துள்ளது.

## புதிய அரசியல் அபிவிருத்தி வேலைத் திட்டத்தை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது

நியாயமற்ற முறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான புதிய அரசியல் அபிவிருத்தி வேலைத் திட்டத்தை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு அமைய, உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் காணப்படுவதுடன் அந்த உரிமைகளுக்கு எவராலும் அச்சுறுத்தல் விடுக்க முடியாது என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசியல் கைதிகளை விடுவிக்கும் இந்த திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு உலக மக்களை அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது. உலகிலுள்ள சில நாடுகள் சட்டத்தை முரணாக பயன்படுத்தி அரசாங்கத்திற்கு எதிரான தரப்பினரை ஒடுக்குவதற்கும் அவர்களை பயங்கரவாதிகளாகவும் தீவிரவாதிகளாகவும் சித்தரிக்க முயற்சிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை, யுத்த குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிச் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட்டுள்ளார். இதனூடாக யுத்த குற்றங்கள் தொடர்பில் உலகிலுள்ள எந்தவொரு நாட்டின் பிரஜைக்கும் அமெரிக்க மண்ணில் வழக்கு தொடர சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் அதிகாரம் அமெரிக்க நீதிமன்ற திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், வெளிநாடுகளில் இடம்பெற்ற யுத்த குற்றங்களுடன் தொடர்புடைய தரப்பினர் அமெரிக்காவிற்குள் நுழைவதும் கடுமையாக கட்டுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சரிவை எதிர்நோக்கியுள்ள பாகிஸ்தானின் பொருளாதாரம்

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு பெய்த வரலாறு காணாத மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் அங்கு 80 சதவீதத்துக்கும் அதிகமான பயிர்கள் நீரில் மூழ்கி நாசமாகின. இதன் காரணமாக அங்கு கோதுமை உள்ளிட்ட பல்வேறு உணவு தானியங்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனை ஈடு செய்ய பாகிஸ்தான் அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்து வந்தது.

இருப்பினும் அங்கு உணவு தானியங்களின் விலை தாறுமாறாக எகிறியது. இதனால் அரசின் சார்பில் மானிய விலையில் உணவு தானியங்கள் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் அங்கும் ஏராளமானோர் முண்டியடித்து சென்று வாங்கும் நிலை உள்ளது. இதற்கிடையே மாவு வாங்க சென்றபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி இதுவரை 5 பேர் உயிரிழந்து உள்ளனர்.

இந்த நிலையில் தற்போது அந்த நாட்டின் அன்னிய செலாவணி இருப்பு வெகுவாக குறைந்துள்ளது. இதனால் அடுத்த 3 வாரங்களில் பாகிஸ்தான் திவாலாகும் நிலையை எதிர்கொள்ள நேரிடும் என சர்வதேச பொருளாதார வல்லுனர்கள் எச்சரித்துள்ளனர்.























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 15.01.2023 அன்று வெளியிடப்பட்டது.